வெளியீடு எண். 23.

உ

குருபாதம்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்

அருளிச்செய்த

பண்டார மும்மணிக்கோவை

இது

தருமபுர ஆதீனம் 25-வது மகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளவர்கள்

ஆணையின்வண்ணம்

ஆதீனத்து அடியவரும், வித்துவானுமாக விளங்கிய

ஸ்ரீமத் சட்டைநாதத் தம்பிரான் சுவாமிகள்

எழுதிய குறிப்புரையுடன்

வெளியிடப்பெற்றது.

இரண்டாம் பதிப்பு

தருமபுர ஆதீனம்

1953

பிரதிகள் 1000.

ஞானசம்பந்தம் பிரஸ்,
தருமபுரம்.

நூன்முகம்

எம்மணிக்கோ வைக்கும் இணையுண்டு பண்டார
மும்மணிக்கோ வைக்கிணையா மூவுலகில்—எம்மணிவே
றுண்டு தருமைக் கிறைமாசி லாமணியைக்
கொண்டுதிகழ்ந் தால்இணையா கும்.

எந்நாட்டவர்க்கும் இறைவன் ஆவன் எனினும், தென்னாடுடைய சிவன் என்று சிறப்பிற்கொள்ளப் பல காரணம் இருக்கின்றன. சிவாலயங்கள் தென்னாட்டிலே மிகுந்து ஓங்கி விளங்குகின்றன. சைவ மடாலயங்கள் வேறு எந்நாட்டிலும் இப்பொழுது இல்லை. நூல்களில் வடநாட்டிலும் இருந்தன என்று எழுதியிருக்கின்றனர். சிதம்பரம் பிரசித்திபெற்ற சிவாலயம். அதுபோலத் திருவாவடுதுறையிலும் தருமபுரத்திலும் உள்ள சைவ மடாலயம் இரண்டும் உலகம் புகழும் உயர்வுடையன. தருமையாதீனத்தில் நான்காவது பட்டத்தில் வீற்றிருந் தருளிய பரமாசாரிய சுவாமிகளாகிய ஸ்ரீலஸ்ரீ மாசிலா மணி தேசிகர் போல எவரும் எக்காலத்தும், இப் **பண்டார மும்மணிக்கோவையைப்** போன்றதோ இத னினும் சிரியதோ என ஒரு திருவருட் பனுவலைப் பெற் றிலர். இது வெறும் புகழ்ச்சியன்று என்று எல்லோரும்

அறிவர். அறியாதாரும் ஒருமுறையேனும் இந்நூலைக் கற்றுல் எளிதாய் அறிந்துகொள்ளலாம் இது மெய் யென்று.

இந்நூலாசிரியர் குமரகுருபர முனிவரைப் போல இவர்காலத்திற்கு முன்னும் பின்னும் செந்தமிழ்ச் சைவப் புலமையந்தணர் யாரும் இல்லைபோலும். இவர்க்குப் பின்னர்த் தோன்றிய சிலர் பெருமதிப்பிற்கு உரியராய் விளங்கினரேனும், இவர்போலச் செந்தமிழ்ச் செய்யுளை நியாயம் வல்லார் நிலையினின்று பாடியவரல்லர். இவர் யாதானும் ஒன்றை நாட்டும்போது, காட்டும் நியாயம், சட்டங்கற்றுவல்லார் எல்லாரையுந் தலைகுனியச்செய்யுஞ் சிறப்பினதாயிருக்கின்றது. சங்ககாலத்துத் தமிழ்நடை இவர்க்கு இயல்பாதல் இந்நூலில் கண்ட இடமெல் லாம் புலப்படும். இவர் அருளிய நூல்கள் பதினென்று. ஒருகுறமும் இரண்டு இரட்டைமணிமாலையும் சேர்த்துப் பதினுன்கென்றும் முன்னேர் சொல்லினர். அவற்றுள், சிதம்பர மும்மணிக்கோவையும் ஒன்று. அதன் முதல் திருப்பாடலுள், ஒரு நியாயங்காட்டித் தன் கருத்தை நிலைநாட்டுகின்றுர். அதனைக் கருதுவோம்.

சிவபிரான் அருளிய நூல்களிற் சொல்லப்பெறும் அறங்கள் பல. அவற்றுள் சிறந்தனசில. அவை இல்லறம் துறவறம் என்பவை. அக்காலத்துள் பிரமசரியத்தினை உடையவராயிருந்த இவ்வாசிரியர்க்கு அவை வேருயின. அதனுல், அரும் பெரும் பேற்றிற்கு வழியாகத் திரு வாரூரிற் பிறப்பது, காசியில் இறப்பது, தில்லைச் சிதம் பரத்தைக் காண்பது என்று மூன்றுண்டு என அறிஞு

ரால் அறியப்பெற்ருர். அம்மூன்றிலும் தில்லைக்காட்சி எளிதில் ஆவது என்று பொன்னம்பலவாணன் திருமுன் நின்று, 'அடியேன் அன்பிலேன் எனினும் உன்னருளை நல்குக' என்று வரங்கேட்டார். இதற்கு ஒரு நியாயம் உரைக்கின்ருர். அதுதான்,

''மருந்துண் வேட்கையன் மனமகிழ்ந் துண்ணினும்
அருந்துழி ஒருவன் அருவருப் புறீஇத்
தன் முகம் சுளித்து............ கலுழ்ந்தனன் மாந்தினும்
வாய்ப்புகு மாயின்அம் மருந்து இருவருக்கும்
தீப்பிணி மாற்றுதல் திண்ணமே''

என்று ஒரு பொதுவான உலகியலையும் எடுத்துக்காட்டிப் பின்னும்,

''நொதுமலும் பகையும் போக்கி ஒருபொருள்
விழுத்தகு கேண்மையோர்க்கு உதவல்
வழக்கும் அன்று ஐய மன்றுடை யோர்க்கே''

என்று நீதிபதிக்குச் சிறப்பான விதியும் உணர்த்தியருளிய திறம் சட்டஞானச் செருக்கினரை மகிழ்வித்து மட்டந்தட்டுந் திட்டத்தில் உயர்ந்தோங்கியிருத்தல் அறியத்தக்கது: நியாயாதிபதிக்குச் சிநேகம், விரோதம், இரண்டுமில்லாமை ஆகிய மூன்றும் ஒன்ருதலை அறியாதார் எவர்? பட்சபாதமாகத் தீர்ப்பு, சிநேகத்தாலோ விரோதத்தாலோ நேரும். அது நியாய தலத்துக்கும் அதன் அதிபதிக்கும் பொருந்தாது அன்ருே? தில்லை மன்றும் அம்மன்றுக்கு அதிபதியாகிய நடராசப்பிரபுவும் பக்தர், பக்தர் அல்லாதார், நிந்தகர் மூவர்க்கும் பொதுவா

யிருந்து அருள்கின்ற இடமும் அருள்பவரும் ஆதலின், 'சிற்றுயிர்க்கு இரங்கும் பெரும்பற்றப்புலியூர் உற்ற நின் திருக்கூத்து.........மன்றுடையோர்' என்றார்.

அம்மன்றின் நடனத்தைக் கும்பிட்டுப் பிறவாநெறி பெற்றகாரணத்தால் தவஞ்செய்யாத தாமும் தவஞ் செய்தபெருந்தொண்டரும் வேற்றுமையில்லாதவர் என்பதற்கு இமயமலையைச் சேர்ந்த பொன்னிறப் புருவும், கரிநிறக்காக்கையும் நிறத்தால் வேற்றுமை இல்லை என்று எடுத்துக்காட்டிச் சாதித்த திறமும் இன்னோரன்ன பலவும் அங்கங்குக் காண்க.

இப்பண்டார மும்மணிக்கோவையிலும் தவமில்லாதாருக்குத் திருவருள்புரிவது சாமர்த்தியமாகும் என்பதை ஓர் உவமானம் காட்டி விளக்கியது (பா. 16.) காண்க.

இத்தகைய சீர்த்தி மிக்க நூலாசிரியர் குமரகுருபரருக்கும், இவரை ஆட்கொண்ட குரு மாசிலாமணி மூர்த்திக்கும், அம்மூர்த்திக்கு உறைவிடமான தருமையம்பதிக்கும் ஒப்பு வேறில்லை என்பது இதுவரை விளக்கப்பட்டது.

இப்பண்டார மும்மணிக்கோவையை ஆசிரியர், ஏனைப் பாவலர்போல வெறும் பாவன்மைகொண்டு பாடினாரல்லர். குரு மாசிலாமணி தேசிகர் திருவருள், குமரகுருபரர் திருவுள்ளத்திற்சென்று புகுந்து உணர்த்திற்று; உடனே, நாமகள், சொல்லுக்கும்பொருளுக்கும் உயிராகிய மெய்ஞ்ஞானத்தின் தோற்றம் என இவர்

நாவில் நின்ருள்; இருந்தாள்; வாழ்ந்தாள். வாழ்ந்து, அப்பரமாசாரியருடைய உண்மைப் புகழ்களை எல்லாம் ஒரு கோவையாகத் தொகுத்தாள். அக்கோவை மும் மூன்ருய்ப் பத்துமுறை கோத்த முப்பது தமிழ்மணிகளை உடையதாயிற்று. அப்புகழெல்லாம் முழுதும் சொல்ல அத்தேவிக்கும் முடியாத காரணத்தால் எள்ளளவு சொல்லியதாக அவள் எண்ணிக் குறையுற்ருள். இஃது என் கட்டுக்கதையன்று. ஆசிரியர் திருவாக்கினுலே அறிந்த முழுவுண்மைநிகழ்ச்சியே யாகும். அதனைப் பின் வருவதால் அறியலாம்.

"உள்ளத் தருள்நின் றுணர்த்தஎன் நாவில் உறைந்தவெள்ளை
வள்ளக் கமலத் தவள்மாசி லாமணி வண்புகழில்
எள்ளத் தனைஅள வோர்தொடை ஆக்கி இசைத்தனளால்
கள்ளப் புலன்கொண் டுரைத்தேன் அலன்இக் கவிமுற்றுமே"

இதன் வாய்மையை நன்கு அறியவேண்டுமாஞல், இந்நூலைக் கருவியாகக்கொண்டு, இந்நூலிற்கு உரிய தலைவரான குரு மாசிலாமணியை உள்ளும் வெளியும் போற்றிப் புனைந்து வழிபாடு புரிந்து, "மாசிலாமணித் தேசிகா எனப் பேசுவோர்கள் முப்பாசம் ஓடுமே". என்றவாறே ஓடுதலை முயன்று அவ்வாறுமுகிக் காண் பார் காண்க. இப்பெருமான் திருக்கோயில் தருமை திருமஞ்சனவீதியில் விளங்குகிறது.

இப்பண்டார மும்மணிக்கோவையின் உண்மைச் சிறப்பை அறிய விரும்பின், "பிறவித் தளையை முறித்துக் கருணைக்கடல் (ஆகிய) மாசிலாமணி மெய்ப்புகழால் தொகுத்த தமிழ் மும்மணிக்கோவை(யை) நித்தம்

துதிக்கவல்லார், எடுத்த சனனத்தில் எய்தாத பேரின்பம் எய்துவர்'' என்ற ஆசிரியர் திருவாக்கே அமைவதாகும்.

அருள் உள் இருந்து உணர்த்த, நாமகள் முழுதும் சொல்லமாட்டாமல் எள்ளளவு இசைத்ததாயினும், இது பெரியதொரு சிவஞானப் பொக்கிஷம் என்பது சைவ சித்தாந்தம் வல்லார்க்கே நன்கு புலப்படும். அதற்குச் சான்ருக இதன் பத்தாவது திருப்பாடலைக் காணலாம். இது தோன்றியபின் இதனை எடுத்தாளாத அறிஞரும் இல்லை, நூலுமில்லை. பிரசங்கியுமில்லை சைவத்தில்.

“ஓரும் வேதாந்தம் என் றுச்சியிற் பழுத்த
ஆரா இன்ப அருங்கனி பிழிந்து
சாரங்கொண்ட சைவசித் தாந்தத்
தேனமுது''

இப்பண்டார மும்மணிக்கோவை என்ருல், அதை ஆம் என்று அருந்த முந்தாதார் அறிஞருள் ஒருவரும் இருத்தல் அரிது. பண்டாகரம் என்பது பண்டாரம் என மருவிற்று. பண்டம் - மெய்ஞ்ஞானமாகிய பொருள். ஆகரம்-இடம். மெய்ஞானப் பண்டத்திற்கு உறைவிடம் ஆகிய குருமாசிலாமணி தேசிகர் மீது பாடிய பாமாலை என்ற பெயர்ப் பொருளை நோக்கின் இதன் சிறப்பு இனிது விளங்கும்.

சிவபக்தியும் அடியார்பக்தியும் மிக்க காலத்தவர் நம் ஆசிரியர் குமரகுருபரர். இவர் காலத்தில் மிக்க உயர்வுடைய கருத்தாயிருந்தது ஒன்றே ஒன்றுதான். மற்றெல்லாம் அதற்கு மேற்பட்டனவாகா எனினும்

இழிந்தன அல்ல என்பதும் அறிஞர் இங்குக் கருதத் தக்கது. பழைய கருத்து இது. புதியோர்க்கு வருத்தம் விளைத்தால் என் குற்றமாகாது.

கடவுளையும் அக்கடவுள் அருளைப் பெற்றோரையும் 'நாயனார்' என்னும் பெயரால் குறித்தனர் நம்முன்னோர். அது 'நாயகனார்' என்னும் பெயரின் வேறானது. நாயகன் என்பது வடசொற்றிரிபு. அதற்குப் பெண்பாற் சொல்லாக 'நாயகி' என்றுளது. 'நாயனார்' என்னுந் தமிழ்ப் பெயர்க்கு 'நாய்ச்சியார்' என்ற பெண்பாற்சொல் வழங்குகின்றது. நாயனாரும் நாய்ச்சியாரும் இறைமைக்குணமுடையாரைக் குறித்து வழங்கும் பெயர்கள் மக்கள் பெயரொடு சேர்த்து வழங்கப்பெறுதல் மற்றைய (கடவுட்) பெயர்போன்ற வழக்கமேயாகும். பரவை நாய்ச்சியார் சங்கிலி நாய்ச்சியார் முதலிய பெயர்களை நோக்கின், நாய்ச்சியார் என்பது தலைமை முதலிய சிறப்பு விளக்கும். நாயன் ஒருமை, நாயன்மார் பன்மை. நாயனார் ஒருவரைக் கூறும் பன்மையான உயர்சொற் கிளவி. நாய்ச்சி, நாய்ச்சிமார், நாய்ச்சியார் என்பவை அவ்வாறு வந்த பெண்பாற் சொற்கள்: இவற்றால் இந் நாயன் நாய்ச்சி என்னும் பெயர்கள் தமிழ்ச்சொற்கள் என்று தெளிவாகலாம்.

நாய், நாயன் என்ற இரண்டற்கும் பொருளால் வேறுபாடுண்டு; பொன், பொன்னன் என்பவைபோல. பொன்னையுடையவன் பொன்னன் என்பதுபோல நாயை உடையவன் நாயன். நாயை உடையவள் நாய்ச்சி. பேய், பேயன், பேய்ச்சி என்று வழங்குதலை இதற்குத் துணை

யாகக் கருதலாம். நாய்ச்சி என்பதுபோலப் பேய்ச்சி என்பது பலர்க்குப் பெயராக வழங்கக் கேட்கின்றோம். மாரியம்மன்கோயிலில் ஆவேசங் கொண்டாடுபவளைப் பேய்ச்சி என்பர்.

நாயன் என்பது நாயை உடையவன் என்று பொருள் படின், 'நாய்' என்பது யாரைக் குறிக்கும் என்ற வினுத் தோன்றும். அதுவே நமக்கு இங்கு இப்பொழுது வேண்டுவது. 'நாயனுர்' (சிந்தாமணி, 2097, உரை; சிலப்பதிகாரம், 11, நாடுகாண்காதை. அடி. 4.) நாயன் மார் (மதுரைக்காஞ்சி 446 உரை) என்பவற்றையும் உலகுடை நாயனுர், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர், திருநாவுக்காரசு நாயனுர், சுந்தரமூர்த்தி நாயனுர் முதலிய வற்றையும் எண்ணினுல், நாயனுர் என்பது ஆண்டவனே யும் அவனருளடைந்தவரையும் உணர்த்துவதறியலாம், ஆகவே, நாய் என்பது அவர்க்கு அடியவரை (ஒருவரை) உணர்த்துவதாகும். "நாயிற்கடையாக்கிடந்த அடியேன்' என்றருளிய மாணிக்கவாசகரும், 'அடிநாய்' என்றருளிய சேந்தனுயனுரும், இன்னும் அவரன்ன அருளாளரும் அன்றி மற்றையோர் அறியப் பலகாலஞ் செல்லும். தம்மை நாயாகவும் நாயினுங் கடையாகவும் உண்மையிற் கருதுவோரே பெரியர். அக்கருத்தே தம் அகந்தை மமதை இரண்டும் ஒழித்துத் தம்மை திருவருட்கு உரியவராக்கும் என்பது நம்முன்னேர் எண்ணம். இவ் வெண்ணம் மாணிக்கவாசகர், திருநாவுக்கரசர் காலத் தில் இருந்த அளவு பிற்காலத்தில் இல்லை. நம்பியா ரூரர் காலத்திலும் சிறிது இருந்தது, 'நாயேன் பல

நாளும் நினைப்பின்றி மனத்துன்னைப் பேயாய்த் திரிந்து எய்த்தேன்' என்பது அவர் திருவாக்கு. இது தென் நாட்டுத் தொண்டர்க்கே உரிய சிறப்பாகும். வடநாட்டிலும் வடமொழியிலும் இவ்வழக்கம் உண்டோ என்று ஆராய்தல் நன்று. "நாயுற்ற செல்வம் நயந்தறியா வண்ணம்" "நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனைப்பேயேன துள்ளப் பிழைபொறுக்கும் பெருமையனே" என்ற திருவாசகம் ஒன்றே அடியவர்கள் தங்களை நாய், பேய் என்றும் ஆண்டவனை நாயன் பேயன் என்றும் சொல்லப்பெறும் உயரிய வழக்கத்தை மெய்ப்படுத்தும். இங்கு அதற்கு இடம் இல்லையாதலின், அதைத் தனி ஆராய்ச்சியிற் கொள்ள எண்ணி, இதனோடு நிறுத்தி, இதன் பயனாக இப்பண்டார மும்மணிக்கோவைப் பகுதியின் உண்மைச்சிறப்பைக் குறிக்கின்றோம்.

ஆசிரியர் குமரகுருபரர் பெருமைகளை எவராலும் அளவிட்டுச் சொல்லுதல் இயலாது; அவ்வளவு சீர்த்தி உடைய அவர் தம் குருநாதரிடம் ஒரு நாயாக—அதிலும் எச்சிலுண்ணும் நாயாகப் பிறக்கவேண்டும் என்று வரங் கேட்பாராயின், 'நாய்' என்ற சொல்லைக் கேட்டதும் ஓராராய்ச்சியும் இன்றி இழிவிற்கருத்தைச் செலுத்தலாமோ? அவர் திருவுள்ளத்தில், பிறவியின் இழிவும், பிறவாமையின் உயர்வும், சிவபக்தியும் அடியார்பக்தியும் இல்லாத மானிடப்பிறப்பின் கீழ்மையும், அவை உள்ள ஏனைப்பிறப்பின்— அதிலும் நாய்ப்பிறப்பின் மேன்மையும் எந்த அளவில் இருந்தன என்று நாமோ அறிய வல்லோம்? பக்தியில்லாது திரியும் மாக்களினும்,

பக்தியுடன் உலாவும் நாய்கள் மேலானவை என்பது அக்காலத்து மெய்யடியார் திருவுள்ளம் ஆதலின், ‘நாயேன்’ என்று மேன்மைப்படுத்திக்கொள்ளும் உயரிய வழக்கம் உலகவழக்கு செய்யுள்வழக்கு இரண்டிலும் போற்றப்பட்டுவந்தது. அஃறிணைக்குரிய ‘கள்’ விகுதியொடு ‘அவர்கள்’ ‘தாங்கள்’ என வழங்கும் இழிவு இக்காலத்தில் மிகுந்தபின்பு, அதன் உயர்வு புலப்படாது போயிற்று.

நம் குமரகுருபரமுனிவர், தம் குரு மாசிலாமணியை வழிபட்டுநின்று வரங்கேட்டபோது (பா. 4) “அடியேன் வேண்டுவது பிறவாமையே ; அது தந்தருள்வது அரிதாயின் என் விருப்பிற்குரிய ஒரு பிறவி தந்தருள்; இந்திரனுகவோ, பிரமனுகவோ, விஷ்ணுவாகவோ பிறக்க விரும்புகிலேன். ஐந்து தேவமரத்தின்கீழ் இருத்தலும், பல்லுயிர்த் தொகுதியைப் படைத்தலும், உலகங் காத்தலும் பிறவியைத் தருவன. கல்வியும் ஒழுக்கமும் இல்லாமல் பழியுடையரானுலும் உன் அடியாரென்ருல் போதும். அவர் உண்டு தெருவிற்போட்ட எச்சிலே உண்டு பிறவிக்கடலில் வருந்தும் வரம்பெற்ற நாயாகப் பிறக்கச் செய்தருள்” என்று திரிகரண சுத்தியுடன் வேண்டினுர் என்ருல், நாய், நாயன், நாய்ச்சி என்ற அருட் சான்ருேர் திருநெறியின் தனிப்பெருமை மீண்டும் இத் தமிழ்நாட்டில் என்றுவரும்? என்றுவரும்? என்றுதானே அறிஞர் அவாவுதல் வேண்டும்! ‘பரிகலம்’ என்ற பெயர் இன்றும் மடங்களில் வழங்கப்பெறுகின்றது. அதன் சிறப்பு இன்றும் காக்கப்பெற்றுவருகின்றது.

இச்சீரிய பண்பு குமரகுருபரர்க்கு எங்கு வந்தது? தருமையில். எதனுல்? குருமாசிலாமணியால். அம்மணி யின் உண்மை நெறியே சைவத்திருநெறி. அதுவே பேரின்ப வீட்டை நல்குவது. (பா. 6, 8, 9. 11, 14, 15, 17, 20, 21, 23, 26. 27 பார்க்க).

இத்தகு ஞானச்சிறப்புமிக்க இப்பண்டார மும் மணிக்கோவைக்கு இதுகாறும் பதவுரையோ பொழிப் புரையோ காணப்படவில்லை காரணம் சைவசித் தாந்த நூற்பயிற்சி வரவரக் குறைந்ததேயாகும். இவ் வாசிரியர் அருளிய நூல்களுள் சிலவற்றிற்கு உரை எழுதினர் அறிஞர். மதுரைக் கலம்பகத்திற்குச் சைவர் எழுதினும் அத்துணைச் சிறந்திராதெனும்படி, புகழுடல் பெற்ற வைணவப் பெரும்புலவர் வை. மு. சடகோப ராமாநுஜாசாரியார் எழுதிய உரை மிகப் பாராட்டத் தக்கது. காசிக் கலம்பகத்துக்கும் பழைய உரை உண்டு. நீதிநெறி விளக்கத்திற்கும் பல உரைகள் இருக்கின்றன. கந்தர் கலிவெண்பாவிற்கும் உரை உண்டு. கோவை, பிள்ளைத்தமிழ்கட்கு நல்ல உரைகள் வந்தில. இப்பண் டாரமும்மணிக் கோவைக்கு (குமரகுருபரர் பிரபந்த வெளியீடுகளிற் சேர்ந்த) குறிப்புரைமட்டும் உண்டு. அது மிக்க சுருக்கமே.

தருமையாதீனத்து அடியவர்கூட்டத்துள் ஒருவரும், சிறந்த புலவருமாய் விளங்கிய **ஸ்ரீமத் சட்டைநாதத் தம்பிரான் சுவாமிகள்** அவர்கள் எழுதிய குறிப்புரையே சற்று விரிவாய்ப் பலர்க்கும் பயன்பட்டது. அதன் முதற் பதிப்பு ஆதீனத்தில் 24-ம் பட்டத்தில் விளங்கி இருந்த

ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் அருளாணைப்படி, இப்போது திருப்பனந்தாள் காசிமடத்தில் திகழும் **ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள்** அவர்களால் அப்பொழுது (1937-ல்) வெளியிடப்பெற்றது. அக்குறிப்புரையும் அதன் ஆசிரியர் எழுதியருளிய முகவுரையும் இப்பதிப்பிலும் அமைந்துள்ளன.

இந்நூற்பொருளை உணர்தற்குப் பல சாதனங்களும் திருமடத்திலிருந்து அடியவர்களொடு கலந்து தொண்டு புரிந்தும் வழிபட்டும் ஒழுகும் நிலையும், நல்லாரிணக்கமும், சைவாசாரப் பழக்கமும் இன்றியமையாதன. அவற்றை ஒருங்கு பெற்றிருந்த காரணத்தால்தான் இக்குறிப்புரையே ஏனையோர் எழுதிய குறிப்புக்களினும் மேம்பட்டிருக்கின்றது. பா. 25, 26, 30 குறிப்புக்களைக் கண்டுணர்க. குறிப்புரையின் ஆசிரியர்க்குச் சங்கநூற் பயிற்சியும் இருந்ததென்பதற்குச் சிறுபாணாற்றுப்படை மேற்கோளும், சாத்திரம் வல்லார் என்பதற்குப் பற்பல இடங்களில் சிவஞானபோதம் துகளறுபோதம் முதலிய பல ஞானநூல்களின் மேற்கோளும் சான்றாய்த் திகழ்கிறது. அவர்காலத்திற்போல, இப்பொழுதும் அடியார் கல்வி கேள்விகளின் சிறப்பு வளர்ந்துவருகின்றது.

இதிலுள்ள சிலவற்றின் உண்மைப்பொருள் நன்கு விளங்காமல் அடியேன் வருந்தியிருந்து, நெடுங்காலம் முயன்றுணர்ந்தேன். அவ்வுணர்ச்சியின் பயனைக் குமரகுருபரன் என்னும் மாதசஞ்சிகையில் எழுதிவரும்

கட்டுரைகளை ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் திருக்கண்ணோக்கம் புரிந்தருள்வதால், அடியேனுக்கு இந்நூன்முகம் எழுதும் பேறு வாய்த்தது. இவ்வாய்ப்பினைப் போற்றி ஏற்று, அவர்கள் பொன்னார் திருவடித் தாமரைகளைத் தலை மேலும் மனத்துளும் வைத்து வணங்கும் வடிவான நன்றியறிதலோடு, சில கருத்துக்களை வெளியிட விரும்பு கின்றேன்.

"தானவ னாகிய தன்மைபெற் றானடி தாழப்பெற்றால்
தானவ னாகிய தன்மைபெற் றுய்வன்அத் தன்மைஇன்றித்
தானவ னாகிய தன்மைபெற் றேற்கருள் தாழ்சடிலத்
தானவ னாகம் பெருமாசி லாமணிச் சம்பந்தனே" (பா. 12.)

என்றதில், 'உய்வன்' என்று முடியும் பகுதிக்கும் பிற்பகுதிக்கும் தொடர்பில்லாமல் உரையெழுதினர் பிறர். அடியேனுக்கும் புலவர் சிலர்க்கும் அதன் பொருள் தெளிவாகப் புலப்படாமல் இருந்தது. அதற்குக் காரணம் 'உய்வன்' என்னும் வினையைத் தன்மைக்கு ஏற்றாமல் படர்க்கைக்கு ஏற்றிப் பொருள்கொண்டதே யாகும். உய்வன் என்பதற்கு 'என்றும் மாறாது அந் நிலையில் இருப்பான்' என்றார் ஒருவர். அதைத் தன்மை வினைமுற்றாகக்கொண்டு உரைத்தாலன்றிப் பொருட் பொருத்தம் உறாது.

தான் (ஆன்மா) அவன் (சிவன்) ஆகிய தன்மை யைப் பெற்றவன் திருவடியைத் தொழப்பெற்றால், சிவ மாந் தன்மையைப் பெற்று உய்வேன். அந்தத்தன்மை யைப் பெறுதல் இன்றி, அதற்கு மாறான தன்மையை

(அதாவது அவன் தானாகிய தன்மையை சிவன் இந்த ஜீவனே என்னும் அகர்பிரமபாவத்தை) அடைந்தேன். அம்மாறுபாடு அடைந்த எனக்கு அருள்செய்யும் சடையவன் குருமாசிலாமணிச்சம்பந்தனே. சிவமான ஞானியின் திருவடி வணக்கமே வணங்கிய உயிரைச் சிவமாக்கும். அவ்வணக்கம் செய்து சிவமாகி உய்யாமல் அகம் பிரம பாவத்தை அடைந்தேற்கு அருள்செய்யும் சடையுடையவன் மாசிலாமணிச் சம்பந்தனே. 'தாழ் சடிலத்தான்', 'அருள் சடிலத்தான்' என்னும் இரண்டும் வினைத்தொகையாம். சடிலத்தான் என்பது எழுவாய். சம்பந்தன் என்பது பயனிலை. ஏகாரம் பிரிநிலை. தான் அவன் ஆகிய தன்மை பெற்று உய்யாமல் அவன் தானாகிய தன்மை பெற்றேற்கு முதலடியிற் குறிக்கப்பெற்றவர் அருளமாட்டார். மாசிலாமணிதேசிகரே அருளவல்லார். சிவமாதற்குரிய ஒழுங்குமாறுதவர்க்கே அருளவல்லார் மற்றைத் தேசிகர். இம்மாசிலாமணி தேசிகரோ அவ்வொழுங்குக்கு மாறான எனக்கும் அருளவல்லார் என்பதே கருத்து. இதனால், குருமாசிலாமணிதேசிகரே நெறிதவறுனவரையும் கதிசேர்க்கவல்லார் என்பதாம். (நாகம் பெறற்கு அரியது இம் மாசிலாமணி.)

"ஆரூர் அமர்ந்த ஞானசம்பந்த
நிற்புகழ்ந் திறைஞ்சும் கற்பின் மாக்கள்
விருப்பு வெறுப்பற் றிருப்பர் என்ப
பொருட்டுணி புணர்ந்த புலமை யோரே
இகபரம் இரண்டினும் எதிர்நிறை கொளினும்
தொகுதியுள் வேற்றுமைத் தொகைப்பொருள் கொளினும்
முன்னவர் மொழிந்தவர்க் கன்னியம் ஆதலின்

விருப்பு வெறுப்புள வாய
கருத்தின ராகவுங் கண்டனம் யாமே." (பா. 13.)

என்பதற்குள்ள குறிப்புரைகளை அறிந்தால், ஐயங்கள் பல தோன்றும். 'கற்பின் மாக்கள்' என்றது 'கற்றலை யுடைய அடியார்கள்' என்று பொருள்படின், அடியார் களை மாக்கள் என்ற குற்றம் சாரும். அடியாரை மக்கள் என்பதே குற்றமாகும். அதனினும் மாக்கள் என்பது எவ்வாறு ஒவ்வும்? கற்பு - கல்வி. 'கற்பிலா மூர்க்கர்' என்றது காண்க. கற்பு இல் - கல்வி இல்லாத. மாக்கள் - மாந்தர்கள். அவர்தம் கூற்று 'விருப்பு வெறுப்பு அற்றிருப்பர்' என்பது அக்கூற்றை இருவேறு வகை யாகப் பொருள்செய்துகொண்டனர் புலவர். சொற்குப் பொருள் துணிதலை உணர்ந்தவர் புலவரேயாவர். அவர், 'விருப்பு வெறுப்பு' என்னும் இரண்டின் வரிக்கு எதிர் நிலையாக, 'இகம் (இம்மை) பரம் (மறுமை) இரண் டினையும் கொண்டு, இகத்தில் வெறுப்பும் பரத்தில் விருப்பும் அற்றிருப்பர் என்று ஒருபொருளும், விருப்பந் தரும் உலகவாழ்வு முதலியவற்றுள் ஞானியர்க்கு இருக் கத்தக்க வெறுப்பு நீங்கியிருப்பர் என்று ஒருபொருளும் கொண்டனர். இவ்விருவகைப் பொருள்கோளுள் முன் னது எதிர்நிரல்நிறைப் பொருள்கோள். பின்னது வேற்றுமைப்பொருள்கோள். இரண்டு பொருளிலும் கல்வியில்லார்கூற்று வேறுபயிற்று. ஆகவே, குருமாசிலா மணியை விருப்பும் வெறுப்பும் உடையவரென்ற முடிவை ஏற்றினர் குமரகுருபரர். தம் குருநாதரை அவ்வாறு சொல்லிவிட்டால் அது பிறரை மயக்கும் அன்றோ?

அதனால், இருபொருள்படக் கூறிக் கல்லார் கூற்றும் கற்றார் கூற்றும் மெய்யுரை என்னும்படி சமற்காரம் தோன்றப் பாடினார். அதுவே,

"விருப்பு வெறுப்புள வாய
கருத்தின ராகவும் கண்டனம் யாமே"

என்பது.

1. விருப்பும் வெறுப்பும் உள்ளனவாகிய கருத்தினர் 2. விருப்பத்தை வெறுப்புள் அவாய கருத்தினர் என்று இரு பொருள்படத் தொடர் அமைத்தருளிய திறம் ஆராயத்தக்கது.

இரண்டாவதன் பொருளாவது, வெறுக்கத்தக்க பிரபஞ்சத்துள் விருப்பத்திற்குரிய பரிபூரணாநந்த தரிசனத்தை அவாவிய கருத்தினர் என்பதாம். (கோளினும் எனவும் பாடம் உண்டு)

"ஆரூரே ஊர்பேர் அருள்மாசி லாமணிஎன்று
ஓர்ஊர்பேர் இல்லாற்கு உரைத்தேற்குப்—பார்எறப்
பொய்என்றான் மெய்என்றான் பொய்யான பொய்யுடலை
மெய்எனறான் பொய்என்றான் மீண்டு" (பா. 20)

என்றதில் முற்பகுதிக்கும் பிற்பகுதிக்கும் ஒருதொடர்பும் விளங்காமல் இருந்தது. ஊர் என்றது இடத்தை. பேர் என்றது உடலுக்கிட்டதை. ஆதலின், இடமாகிய பாரின் பொய்மை மெய்மையும் பேர்க்குரிய உடலின் மெய்மை பொய்மையும் கூறப்பட்டன என்ற தொடர்பு குறிப்புரைகளால் உணர்த்தப்படாமை காண்க. 'சமயங்

தீர்ந்த தனிப்பொருள்' (19) என்பதற்குக் காலாதீதம், சமயா(மதா)தீதம் என்று இருபொருள்கொள்ளவேண்டும். இன்றேல் பொருந்தாது. இதுபோன்று இன்னும் பல பகுதிகளை, நூலாசிரியர் திருவுள்ளத்திற்குத் தக்கவாறு உணர்ந்துகொள்ள, அவர் திருவடிமலரை நாடொறும் தொழுதுவருகின்றேன்.

இப்பண்டார மும்மணிக்கோவையைப் பொருளாக் கொண்டவர் வேறு எம்மணிக்கோவையையும் பொருளாக்கொள்ள விரும்பார் என்று ஆசிரியரே பாடியருளினுராயின், அவ்வாறு பாடுவித்த நாமகளின் திருவுள்ளமும் அத்தேவியை ஏவிய திருவருளும் அதையே நமக்கு உணர்த்தவந்தன என்னத் தடை உண்டோ?

இப்புதிய பதிப்பு இரண்டாவது பட்டத்தில் சிவமாகிய **ஸ்ரீலஸ்ரீ ஆநந்தபரவசதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் திருநாளின் நினைவு மலராக** வெளியிடப்பெறுஞ் சிறப்புற்றது. இக்குறிப்புரையுடன் வெளியிடுவதில் இஃது இரண்டாவது பதிப்பாயினும், 24-வது மகாசந்நிதானம் அவர்கள் பத்தாண்டாட்சி மலரில் தருமபுர ஆதீனத்தமிழ்ப்புலவர் சித்தாந்த கலாநிதி திரு. ஔவை. சு. துரைசாமி பிள்ளை அவர்கள் ஆராய்ச்சியுடன் மற்றொருமுறை சேர்த்துப் பதிப்பிக்கப் பெற்றது. இத்தருமையாதீனத்திற்கே உரியதும் எல்லாவுலகிற்கும் ஞானப்பயன் விளைப்பதும் ஆகிய இப்பண்டார மும்மணிக்கோவையைப் பலமுறை பதிப்பிக்கச் செய்தருளியும் அன்பும் ஆர்வமும் அறிவும் உடையவர்க்கு வழங்கியும் வரும் அருளுபகாரத்தைப் புரிந்து

இருபத்தைந்தாவது குருமகாசந்நிதானமாக அருளாட்சி நடாத்துகின்ற **ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகளவர்கள்** அடியேனையும் இதில் ஈடுபட்டுய்யும்வண்ணம் ஏவியருளிய பெருங் கருணைத் திறத்தை எழுமையும் மறவாது போற்றக் கடவேன்.

ஆவிக் கணியாம் அருட்சுப்ர மண்யகுரு
கோவிற் கணியாங் குரைகழலைப்—பூவில்
வழிபட்டு வாழ்திறத்தால் மாயைமுதல் மூன்றும்
கழிபட்டுப் பெற்றேன் கதி.

அடியன்,

ஆதீனப் புலவன்,

தருமபுரம், 2—1—53. } **முத்து. சு. மாணிக்கவாசகன்,**
ஆதீனக்கல்லூரிப் பேராசிரியன்.

உ

குருபாதம்

முதற்பதிப்பின் முகவுரை

கேட்டிடுஞ் செவியு மாசா ஞமமே கெடாது காணு
நாட்டமு மாசான் மேனி நாட்டமே நவின்ற வாக்கிற்
கோட்டிடு முரையு மாசான் துதிகளே குணத்து மெய்யிற்
பூட்டுறு தொழிலு மாசான் வழிச்செயப் புகழா மன்றே.

இந்நிலவுலகத்தில் எத்தொழிலும் எப்பழக்கமும் கைதேர்ந்த பெரியார் ஒருவர் பயிற்றுவிக்கப் பயில வேண்டும். அப்படிப் பயில்வதே உறுதிபயப்பக் கடை போவதாகும். அதுவே குரு உபதேசம் என்று புகழ்ந்து பேசப்பெறும். அப்படியன்றித் தானே யொன்றைக் கற்பான் தொடங்கல் தட்டுற் றிடர்ப்பட்டுப் பயன்படா தொழியும் என்றும், அதுவே தான்றோன்றிக் கொள்கை யென்றும் கூறுப. எனவே குருவருளே இம்மை மறுமை இயல்வளங்களைத் தருதற்கேற்ற சாதனம் என்பது வெள்ளிடைமலை.

நமது சுத்தாத்துவித சைவ சித்தாந்த நெறியில் இறைவன் தன்மையிலும் முன்னிலையிலும் படர்க்கை யிலுங் குருவாக நின்றுணர்த்துவன் என்றும், அப்படி உணர்த்தப்பெறுபவர் விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்ற மூவகை ஆன்மாக்கள் என்றும் கூறப் படுகிறது.

இம்மூவகையில் ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களையும் உடைய நம்போன்ற சகலர்க்குக் குரு வடிவங்கொண்டு நின்றுணர்த்தலே இறைவன் படர்க்கையின் உணர்த்தலாகும். அப்படி உணர்த்துங் குருவடிவம் இறைவனேயன்றி வேறன்றென்க. அவ்விறைவனுக்குச் சகலராகிய நம்மாற் செய்யக்கூடிய பிரதி உபகாரம் வாயார வாழ்த்துதலேயாம் என்பது சர்வ சாத்திர சம்மதம்.

அப்படி வாயார வாழ்த்தற்கேற்ற சாதனமொன்று வேண்டுமன்றோ? அதுவே நமது தருமைக் குரு மாசிலாமணி தேசிகர் தோத்திரமாகிய பண்டார மும்மணிக்கோவையாகும்.

உலகத்திலுள்ள வேதானுசார சர்வமத சாரங் கொண்ட சைவசித்தாந்தம் மதங்களுள் தலைசிறந்ததாம். அதனை உபதேசிக்குங் குருமார்களுள் தருமபுர ஆதீனத்துக் குரு மாசிலாமணிச் சம்பந்த தேசிகர் தலை சிறந்தார். அவரால் அருளிச் செய்யப்பட்ட குரு தோத்திரமாகிய பண்டார மும்மணிக்கோவை, உலகத்து வழங்கும் குரு தோத்திர நூல்கள் எல்லாவற்றுள்ளும் தலைசிறந்ததாம். இப்பண்டார மும்மணிக்கோவையில் எடுத்து விளக்கப் பெறாத சைவசித்தாந்த நுண்பொருள் ஒன்றும் இன்று என்றே கூறலாம்.

பாஷாநயமும் காவியப்பண்பும் சாத்திர நுட்பமும் தோத்திர மாண்பும் பொருந்தி விளங்கும் இப்பண்டார மும்மணிக்கோவையைத் தனிப் புத்தகமாகப் பெற்று

யாவரும் ஓதிப் பயன்பெறவேண்டும் என்னும் பெருங் கருணையால் பாட்டுடைத்தலைவர் பரம்பரையில் குரு மூர்த்தியாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முக தேசிக சுவாமிகள் எற்துப் பணித்தவண்ணம் ஒரு குறிப்புரை எழுதிச் சேர்க்கப்பெற்றுப் பண்டார மும்மணிக்கோவை தனிப் புத்தகமாக வெளிவருகிறது.

இந்நூல் ஏற்கெனவே குமரகுருபர சுவாமிகள் பிர பந்தத்தில் சேர்ந்து பல பதிப்புகள் வெளிவந்திருப்பினும் பாராயணம் செய்வார்க்கு இப்படித் தனிப் புத்தகமாகக் கிடைப்பது பெரும் பயனுடைத்தாகும்.

இந்நூலை அச்சிடச் செய்த நமது குருமூர்த்தி **ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக சுவாமிகள்** சைவமுந் தமிழும் தலைசிறந்தோங்க இதுபோன்ற நூல்கள் பலவும் வெளிவரச் செய்துகொண்டு சைவசித்தாந்தபானுவாய் சர்வக்ஞதற்பராய் நீடூழிவாழ வேண்டுமென்று பல் லாண்டு கூறுவோமாக

சுபம்.

விண்முகத்திற் பானுவென மேவுந் தருமைநகர்ச்
சண்முகப்பேர் கொள்ஞான சம்பந்தன் — வண்மலர்ப்பொற்
பாதங்கள் வாழி பரவுமடி யார்வாழி
நாதனருள் வாழிமிக நன்று.

வித்துவான்,

தருமபுர ஆதீனம்,
5—6—37.

தரு. ஞா. சட்டைநாதத் தம்பிரான்,
கட்டளை விசாரணை,
திருக்குவளை தேவஸ்தானம்.

உ

குருபாதம்

தருமபுரம் ஸ்ரீ-ல-ஸ்ரீ மாசிலாமணி தேசிகர் தோத்திரமாகிய

பண்டார மும்மணிக்கோவை

காப்பு

நேரிசை வெண்பா

எண்டிசைக்குஞ் சூளா மணிமாசி லாமணிசிர்
கொண்டிசைக்கு மும்மணிக் கோவைக்குக்
—கண்டிகைபொற்
பைங்நாகத் தானனத்தான் பாற்கடலான் போற்றவருள்
கைங்நாகத் தானனத்தான் காப்பு.

சூளாமணி - சிரோரத்தினம். மாசிலா மணி - பாட்டுடைத்தலைவராகிய மாசிலாமணிதேசிகர். பொற்பைங்நாக கண்டிகையான் எனக்கூட்டுக கண்டிகை-ஒருவகை ஆரம். 'திருமார்பில் ஆரமும் பாம்பு' என்றார் சிதம்பரச்செய்யுட் கோவையில் (செ. 4). கண்டிகையான் - சிவன். அனத்தான் - பிரமன். அனம் - அன்னம். பாற்கடலான் - திருமால். கைங்நாகம்- யானை. ஆனனம்-முகம். கைங்நாகத்தானனத்தான்- யானைமுகக்கடவுள். அனத்தான் பாற்கடலான்

நூல்

நேரிசையாசிரியப்பா

பூமலி சததளப் பொன்னந் தாதுகு
காமர்பீ டிகையிற் கருணையொடு பொலிந்து
வீற்றுவீற் றமைந்த விரிதலைப் புவனம்
பாற்பட வகுத்த பழமறைக் கிழவனும்
மதுக்குட முடைந்தாங் கிதழ்க்கடை திறந்து
பிரசமூற் றிருந்து முருகுகொப் புளிப்ப
வண்டுழு துழக்குந் தண்டுழா யலங்கற்
புரவுபூண் டகிலம் பொதுக்கடிந் தளிக்குங்
கருணைபூத் தலர்ந்த கமலக் கண்ணனும்

போற்ற, பொற்பைங்நாககண்டிகையான் அருள்கைங்நாகத் தானனத்தான் என்க. பொற்பைங்நாக கண்டிகையான் அனத்தான் பாற்கடலான் போற்ற (அவர்கட்கு) அருள் கைங்நாகத்தானனத்தான் என்பாரும் உளர்.

க. வரி 1. சததளம் - தாமரை. நூறு இதழ்களையுடைமையால் இப்பெயர் கொண்டது. 2. பீடிகை - ஆசனம். சததளமாகிய பீடிகை என்க. 3. வீற்று வீற்று அமைந்த- வேறு வேறாகப் பொருந்திய. தலை - இடம். புவனம் - உலகம். 4. பாற்பட - ஊழிற்பொருந்த. முன் உகத்தில் இருந்தபடியே மறு சிருஷ்டியிலும் வகுத்தல் என்பது சத்காரிய முறை. மறைக்கிழவன் - பிரமன். 6. பிரசம் - தேன். ஊற்றிருந்து - இடைவிடாது ஒடி. 7. துழாய் - துளசி. 8. புரவு - காத்தற்றொழில். பொதுக் கடிந்து - தனக்கே உரிமையாகக்கொண்டு. 9. கமலக்

அஞ்சிறைச் சுதைநிறச் செஞ்சூட் டன்னமுஞ்
செம்மயிர்க் கருங்கண் வெள்ளெயிற் றேனமும்
ஆகுபு தனித்தனி யலமர நிவந்த
மீகெழு பரஞ்சுடர் வெளிப்பட் டம்ம
எம்மனோர் போல இனிதெழுந் தருளிக்
கைம்மா றற்ற கணக்கில்பே ரின்ப
மோனவாழ் வளிக்கு ஞான தேசிகன்
விரிகதிர் பரப்பு மரகதத் தகட்டிற்
சுடர்செய் செம்மணி யிடையிடை பதித்தெனப்
பாசடைப் பரப்பிற் பதும ராசிகள்
சேயிதழ் விரிக்குஞ் செழுமல ரோடையும்
அண்டகோ ளகையும் எண்டிசா முகமும்
கோட்டுடைத் தடக்கை நீட்டியளந் தென்னச்
சேட்பட நிவந்த செண்பகா டவியுங்
கால்கிளர் விசும்பிற் கற்பகா டவிக்கு
வேலியிட் டன்ன வியன்மணிப் புரிசையும்
மருங்குசூழ் கிடந்த வண்டமிழ்க் கமலைப்
பெரும்பதி புரக்கும் பேரருட் குரிசில்
நான்மறை நவின்ற நற்பொரு ளிவையென

கண்ணன் - திருமால். 10, சுதை - வெண்மை. 11, ஏனம் - பன்றி. செம்மயிர்க் கருங்கண் வெள்ளெயிறு என்பது முரண்தொடை. 12. ஆகுபு - ஆகி. நிவந்த - உயர்ந்த. 13, பரஞ்சுடர் - பரஞ்சுடராகிய தான். 14. எழுந்தருளி - மானுட வடிவம்பூண்டு வந்து. 15. ஞான தேசிகன் - ஞானாசாரியன். 19. பாசடை - பசிய இலை. ராசி - தொகுதி. 23. சேண் - ஆகாயம், அடவி - காடு. 24. கால் - காற்று. 25. புரிசை - மதில். 26, கமலைப் பெரும்பதி - திருவாரூர். 27. குரிசில் - தலைவன்.

மோனவா சகத்தான் முப்பொருள் நவிற்றுபு
நன்னலம் புரியு ஞானப் பிரகாசன்
இன்னருள் பழுத்த செந்நெறிச் செல்வன்
திருக்கிளர் ஞானத் திருந்திழைக் கணியாம்
அருட்பெருஞ் சைவத் தருங்கல னுப்பண்
ஆசற விளங்கு மாசி லாமணி
அமண்மா சறுத்த கவுணியர் பெருந்தகை
பிள்ளைமை விடுத்த தள்ளரும் பருவத்
துள்ளதன் படிவம் உணர்த்துவ கடுப்ப
மாநிலத் தமர்ந்த ஞானசம் பந்தன்
பொன்னடிக் கமலஞ் சென்னிவைத் திறைஞ்சுதும்

---

29. முப்பொருள் - திரிபதார்த்த இலக்கணம். நவிற்றுபு - சொல்லி. 30. நன்னலம் புரியும் - பேரானந்தப் பெருவாழ்வு தரும். முன் 'கணக்கில் பேரின்ப மோன வாழ்வு அளிக்கும்' என்றதும் அது. ஞானப்பிரகாசன் - திருவாரூர் ஞானப்பிரகாச தேசிகரது. ஞானசம்பந்தரே மாசிலா மணி தேசிகர் எனக் கொள்ளுதல் மரபாதலின் ஞானப்பிரகாசன் இன்னருள் பழுத்த செந்நெறிச் செல்வன் என்றார். 33. நாப்பண் - நடு. 34. ஆசு - குற்றம். மாசிலாமணி - மாசிலாமணி தேசிகர். ஆசற என்பது மாசிலாமணி யாதற்குக் காரணம் கூறியபடி. 'கடவுண் மாமணிக்கு, விளங்கெழின் மிடற்றோர் களங்கமுண்டென்பவக், காசுலா மலினங் கரந்த காரணத்தால், மாசிலா மணியென வண்பெயர் நிறீஇ' என்பதும் அது. 35. கவுணியர் பெருந்தகை - திருஞானசம்பந்த சுவாமிகள். 36. பிள்ளைமை - பிள்ளைப்பருவம். 37. தன்படிவம் - தனது வடிவம். 38. ஞானசம்பந்தன் - மாசிலாமணி தேசிக

இருகால் சுமந்த வொருபெருஞ் சேவகத்
தைம்புலக் களிறுந் தம்புலத் திழுப்ப
ஊனுடைப் பிறவிக் கானகத் துழலா
தேனைய முத்திநா டெய்தவோர்
ஞான வாரண நல்குதி யெனவே. க

நேரிசை வெண்பா

என்வடிவ நின்வடிவாக் கொண்டா யெளியேற்குன்
றன்வடிவ நல்கத் தகுங்கண்டாய்—மன்வடிவால்
வெம்பந்த நீக்கும் விமலநீ மெய்ஞ்ஞான
சம்பந்தன் என்பதனாற் றான். உ

ராகிய ஞானசம்பந்தன் என்க. 40. இரு கால் - இரண்டு கால்கள். சேவகம் - யானைதுயிலிடம்; ஈண்டுச் சரீரம். 41. புலம் - முன்னது இந்திரியம் பின்னது இடம். 42. பிறவி - எழுவகைப் பிறப்பு. 43. பிறவியைக் கானகம் என்றதற்கேற்ப அதற்கு மாறாகிய முத்தியை நாடு என்றார். 44. ஞான வாரணம் - மெய்ஞ்ஞானமாகிய யானை. பொருண்முடிபு .- ஞானதேசிகன் செல்வன் மாசிலாமணி ஞானசம்பந்தன் பொன்னடிக்கமலம் உழலாது நல்குதி என இறைஞ்சுதும் என முடிக்க.

உ. என் வடிவம் - எனது சகல வடிவம். நின் வடிவாக்கொண்டாய் என்றது சகலர்க்கு அநுக்கிரகிக்கும் பொருட்டுச் சகலத்திருமேனிகொண்ட ஆசாரியவடிவத்தை, உன் தன் வடிவம் - தடையிலா ஞானவடிவம். வடிவால் வெம்பந்தம் நீக்கும் - உடலெடுத்து வினைப்பயனை அநுபவிப்பதால் ஆணவமலப் பிணிப்பைப்போக்கும். சம்பந்தன் -

கட்டளைக் கலித்துறை

தானின் றெனைத்தனக் குள்ளே யொளிக்குமென் றன்மைநிற்க
யானின்ற போதெனக் குள்ளே யொளித்திடு மிப்பரிசே
வானின்ற சின்மய மாமாசி லாமணி மன்னுந்தன்மை
நானின்றுகண்டனன்காணேனிதற்கொத்த நன்மணியே. ௩

கலந்து நிற்பவன். சம்பந்தம் - கலப்பு. கொள்வதும் கொடுப்பதுமாகிய சம்பந்தம் என்பதும் ஒன்று. மெய்ஞ்ஞானசம்பந்தன் - மாசிலாமணிச் சம்பந்தன்.

௩. தான் நின்று - சிவத்தன்மை வியாபித்து நின்று. என் தன்மை - வியாப்பியத்தன்மை. யான் நின்றபோது - ஆன்மபோதம் முனைத்து நின்றபோது. எனக்குள்ளே யொளித்திடும் - தனது வியாபகம் தோன்ருது நின்றிடும். உலகத்துமணி பிறவொளியில் தான் ஒடுங்குவதாகவேனும் பிறவொளியைத் தான் ஒடுக்குவதாகவேனும் இருக்கும் இம் மாசிலாமணி இவ்விரண்டியல்பும் பெற்றிருத்தலின் இதற் கொத்த மணி வேறு காணேன் என்றபடி. இப்பாட்டின் பொருளை 'நானவனென் றெண்ணினர்க்கு நாடுமுள முண்டாதல், தானெனவொன் றின்றியே தானதுவாம் - நானென வொன், றில்லென்று தாமே எனுமவரைத் தன்னடிவைத், தில்லென்று தானும் இறை' என்னும் சிவஞானபோதச் செய்யுளானும், 'கோலங்கொண்டவாறுணராதே' என்னும் இருபாவிருபதானும். 'தானென் றவர்முன் ளெளித்தோடித் தன்னை இழந்தவர்முன், யானென்று சென்றிடுங் காசிப் பிரான்'' (செ. 84,) என்று காசிக்கலம்பகத்தில் ஆசிரியர் தாமே கூறுமாற்ருனும் தெளிக.

நேரிசையாசிரியப்பா

மணிவடஞ் சுமந்த புணர்முலைக் கொதுங்கி
ஈயா மாக்கள் தீமொழி கவர்ந்த
சிற்றிடை படைத்த பேரமர்க் கண்ணியர்
கரைகொன் றிரங்குந் திரைசெய்நீர்ப் பட்டத்து
மைவிழி சேப்பச் செவ்வாய் விளர்ப்பக்
கருங்குழல் சரிய வெள்வளை கலிப்பச்
சீராட் டயரு நீராட் டயர்ந்து
புலவியிற் றீர்ந்து கலவியிற் றிளைக்கும்
நீரர மகளிர் பேரெழில் காட்ட
மருதம்வீற் றிருந்து பெருவளஞ் சுரக்குந்
தருமையம் பதிவாழ் சற்குரு ராய
ஒள்ளொளி பரப்பும் வெள்ளிவே தண்டத்
தொருபாற் பொலிந்த மரகதங் கவினச்
சுடர்விடு செங்கதிர்க் கடவுண்மா மணிக்கு
விளங்கெழின் மிடற்றோர் களங்கமுண் டென்பஅக்
காசுலா மலினங் கரந்தகா ரணத்தான்
மாசிலா மணியென வண்பெயர் நிறீஇ

சு. வரி 1. புணர் - நெருங்கிய, ஒதுங்கி - வருந்தி. 2. ஈயா மாக்கள் தீமொழி - இல்லை என்னும் மொழி. அது யாசித்தோர் மனத்தைச் சுடுதலின் தீமொழி என்றார். 4. கரை கொன்று - கரையை மோதி. நீர்ப்பட்டம் - நீர்நிலை. 5, 6. மைவிழி சிவத்தல் முதலிய நான்கும் கலவியில் திளைப்பாரிடத்து நிகழ்வனவாதலின் கலவியில் திளைக்கும் நீரரமகளிர் பேரெழில் காட்ட என்றார். நீர் அரமகளிர் - நீரில் வாழும் தெய்வப் பெண்கள். 10. மருதம் - மருதநிலம். 15, 17. மாசிலாமணி என்னும்

மேன்மையோ டமர்ந்த ஞானசம் பந்த
ஈண்டுனைத் தமியனேன் வேண்டுவ தியாதெனின்
அந்நிய மென்றும் அநந்நிய மென்றும்
இந்நிலை யிரண்டு மெய்திற் றென்றும்
பல்வே றுரைக்குநர் சொல்வழிப் படாது
திவ்வியம் பழுத்த சைவசித் தாந்தத்
திறவா நிலைமைபெற் றின்பமார்ந் திருக்கும்
பிறவா நன்னெறி பெறப்புரி வதுவே
அங்கது புரிதற் கரிதெனின் இங்கொரு
சனனம்யான் வேண்டுவ தினிதருள் எனக்கே. அதுவே,
ஐந்தரு நிழற்கீ ழரசுவீற் றிருக்கும்
இந்திர னாகிவாழ்ந் திருப்பதோ அன்றே
மலரோ னாகி மன்னுயிர்த் தொகுதி
பலர்புகழ்ந் திசைப்பப் படைப்பதோ அன்றே
அடலரா வணையில் அறிதுயி லமர்ந்த
கடவுளா யுலகங் காப்பதோ அன்றே—அவைதாம்
ஆரா இன்பமென் றரும்பெயர் பெறினும்
வாரா வல்வினை வருவிக் கும்மே

பெயருக்குக் காரணம் கற்பித்தவாறு. காசு - குற்றம். 19. தமியனேன் - தத்துவ தாத்துவிக சம்பந்தத்தை மெய்யென்று கருதாது தனித்த யான். 20. அந்நியம் - பேதம். அநந்நியம் - அபேதம். 21. இந்நிலை இரண்டும் எய்திற்று - பேதாபேதம். 22. பல்வேறு உரைக்குநர் - இவ்வாறு வேறுபடக் கூறும் பல சமயவாதிகள். 24. இறவாநிலை - அழியாத நிலைமை. 25. நன்னெறி - ஞானநெறி; சன்மார்க்கம் என்றபடி. 27. சனனம் - பிறப்பு. அது - அப்பிறப்பு. 33. அவைதாம் - வாழ்ந்திருப்பது படைப்பது காப்பதாகிய முற்கூறிய மூன்றும். 35. வல்

அன்னவை யொழியமற் றென்னைகொல் பிறவெனின்
விழுத்தகு கல்வியும் ஒழுக்கமு மிலராய்ப்
பழிப்புள ராயினு மாக வழுத்துநின்
பொன்னடித் துணைசேர் நின்னடித் தொண்டர்
திருவமு தார்ந்து தெருக்கடை யெறிந்த
பரிகல மாந்தியிப் பவக்கட லுழக்கும்
வரனுடை ஞமலி யாகிநின்
அருளையும் அயரா தவதரிப் பதுவே. ச

நேரிசை வெண்பா

அவமாசி லாமனத்தார்க் காருயிரா ஞானேற்
பவமாசி லாமணிச்சம் பந்தா—தவமார்
ததியருளத் தானேநின் சந்நிதிப்பட் டேற்குக்
கதியருளத் தானே கடன். ரு

வினை - சத்துரு ரோகங்களும் மேலைப் பிறப்புக்கு ஏதுவும். 40. ஆர்ந்து - உண்டு. தெருக்கடை - தெருவில். 41. பரிகலம் - போசன பாத்திரம். ஈண்டு அதிலுள்ள சேடம். பரிகலசேடம் கன்மப்பிணியும் சன்மப்பிணியும் போக்கும் என்றல் சித்தாந்தம். பவக்கடல் - பிறவியாகிய கடல். 42. வரன் - சிரேட்டம்; வரமும் ஆம். ஞமலி - நாய், 43. அயராது - மறக்காது.

ரு. ஞானேற்பவ - ஞானத்தை யுதிக்கச்செய்பவனே, ததியர் - பரிபாகம் உடையவர். சந்நிதிப்பட்டேற்கு - சந்நிதியை அடைந்த அடியேனுக்கு. கதி - மோக்ஷம். கடன் - பொறுப்பு. தான் ஏ அசைகள். சந்நிதியை அடையும் பாக்கியம்பெற்ற எனக்குத் தானே கதியருளக் கடன் என்பதும் ஒன்று.

கட்டளைக் கலித்துறை

கடல்பெற்ற தோர்மணி சிந்தித்த நல்குங்
கருத்துக்கெட்டா
மிடல்பெற்ற பேரின்ப நல்கிய வாவருள்
வேலைபெற்றென்
உடல்பெற்ற கண்மணிக் குண்மணி யாகியொண்
கூடல்வைகும்
அடல்பெற்ற ஞானச் சுடர்மாசி லாமணி
யானதொன்றே. சு

நிலைமண்டில ஆசிரியப்பா

ஒன்றே தன்மை யுனக்குமற் றெமக்கும்
அன்றென மொழியினு மாமெனப் படுமே

சு. ஓர்மணி-சிந்தாமணி. சிந்தித்த - நினைத்தவைகளை. கருத்துக்கு எட்டா - மனத்துக்கு எட்டாத. எனவே வாக்குக்கும் எட்டாத என்பதும் உடன்கொள்ளப்படும். நல்கியவா - கொடுத்தவாறு. என்ன வியப்பு என்றபடி. அருள் வேலை பெற்று - சிவசத்தியாற் பெறப்பட்டு; அள வற்ற கருணையை எனக்குச் செய்து என்பதும் ஒன்று. ஞானச்சுடர் மாசிலாமணி - ஞானச்சுடராகிய மாசிலா மணி. 'மீகெழு பரஞ்சுடர் வெளிப்பட்டம்ம' (செ. 1.) என்றார் முன்னும். சிந்தாமணி சிந்தித்த நல்கும்; இம் மாசிலாமணி வாக்கு மனத்துக்கு எட்டாத பேரின்பத்தை நல்கியபடி வியப்பு என்க.

எ. வரி 1. ஒன்றே - ஒருவிதமே. தன்மை - மேற் சொல்லப்படும் அநாதித்தன்மை முதலியன. உனக்கும் -

அங்ஙனம் கூறிய தெங்ஙனம் பிறவெனின்
எஞ்ஞான் றுளையுளம் அஞ்ஞான் றியாமே
அழியா நிலைமையை யனையம் யாமே
வியாபக நினக்குள தியாமுமஃ துளமே
அறிவெனப் பெயரிய பெயரினை அப்பெயர்
பிறிவரும் பெயராப் பெற்றனம் யாமே
இச்சா ஞானக் கிரியையென் றிசைக்குஞ்
சத்திக ளுளையுள தத்திற மெமக்கே
இந்நிலை முழுவதூஉ மெமக்குமுண் டாகலின்
அந்நிய மலநினக் கநந்நியம் யாமே
தருமையுங் கமலையும் விரிதமிழ்க் கூடலுந்
திருநக ராக அரசுவீற் றிருக்கு

பதியாகிய உனக்கும். எமக்கும் - பசுக்களாகிய எங்கட்கும். "சிவன் சீவன் என்றிரண்டுஞ் சித்தொன்றாம் என்னில்" (சித்தியார் சூ 11. செ.11) என்னும் திருவாக்கு ஈண்டுச் சிந்தித்தற்குரியது. 2. ஆம் எனப்படும் - ஆம் என்று சாதித்தல் கூடும். 4, 10. அநாதித்தன்மை அவிநாசித்தன்மை வியாபகத்துவம் சேதனத்துவம் இச்சா ஞானக்கிரியைகளுமுடைமையால். 11. அநந்நியம் - அபேதம்; ஒத்தசாதி என்றபடி. 13. ஆசிரியரது க்ஷேத்திரமும் ஆசிரியரின் ஆசிரியராகிய ஞானப்பிரகாச தேசிகரது க்ஷேத்திரமும், ஆன்மார்த்த மூர்த்தியாகிய ஸ்ரீ சொக்கப் பெருமான் க்ஷேத்திரமும் முறையே தருமையும் கமலையும் கூடலுமாதலின் மும்மூர்த்திகளையும் ஒன்றாகப் பாவிக்கும் அடிகள் தருமையும் கமலையும் விரிதமிழ்க் கூடலும் என்றார். தருமை - தருமபுரம். கமலை - கமலாலயம்; திருவாரூர். கூடல் - நன்மாடக்கூடல்; மதுரை. 14. அரசு வீற்றிருக்கும் - ஞான அரசாக வீற்றிருக்கும்

மாசி லாமணித் தேசிக ராய
சம்பந் தப்பெயர் தரித்தமை யாலெமைச்
சம்பந் தஞ்செயத் தகுந்தகு நினக்கே
கருவிகட் கிறைமை காட்டுபு நிற்றலிற்
புருட நாமமும் புனைந்தன மாயினும்
அத்தநிற் குறிப்பிற் சத்திகள் யாமே
புருடனைச் சத்தியிற் புணர்த்தனை அன்னதற்
கொருகாட் டென்ப புருடோத் தமனே
உன்னுட னெம்மையு மொப்பெனப் படுத்து
முன்னர்க் கூறிய முறைமையிற் சிற்சில
முழுது மொவ்வா தொழியினும் ஒழிக
உயர்ந்தோன் றலைவ னெத்தோட் புணரினும்
இழிந்தோட் புணரினு மிழிபெனப் படாதே

16, 17. சம்பந்தப்பெயர் தரித்தமையால் எமைச் சம்பந்தஞ் செயத் தகும். 'மெய்ஞ்ஞான சம்பந்தனென்பதனுற்றான்' (செ. 2.) என்றார் முன்னும். தகும் நினக்கு - முற்கூறியவைகளால் தகுதிவாய்ந்த பதியாகிய நினக்கு; எனவே தகுதியற்ற மலமாயை கன்மங்கட்குச் சம்பந்தஞ் செய்தல் தகாதென்றபடி. 20. சத்திகள் யாம் - நாங்கள் பெண்தன்மை உடையோம். 21. புணர்த்தனை - புணர்வித்தனை. பதியாகிய தனக்குப் புதுவதாக வரக்கடவதோர் இன்பமின்மையின் புணர்ந்தனை என்னாது புணர்த்தனை என்றார். இன்பம் எய்துவன பசுக்களே என்பது கருத்து. 22. காட்டு - உதாரணம். புருடோத்தமன் - திருமால்; இது தாருகாவன இருடிகள் இருடிபத்தினிகளைக் கர்வபங்கப்படுத்தச் சிவனுந் திருமாலுங்கொண்ட திருக்கோலத் திருவிளையாடலைக் கருதியது. 23. ஒப்பெனப் படுத்து - சமானப்படுத்தி. 24. சிற்சில - வியாபகத்துவம்

ஆதலின் யாமுனைக் காதலித் தனமாற்
காதலின் எமையருட் கைப்பிடித் தருளி
ஒருவரு முணராப் பரம வீட்டில்
இருளறை திறந்த பெருவெளி மண்டபத்
துயர்நா தாந்தத் திருமல ரமளியிற்
புளகமெய் போர்ப்ப மொழிதடு மாற
உள்ளொலி நாதப் புள்ளொலி முழங்க
ஞானவா ரமுத பானம தருந்திக்
கருவிகள் கழன்று பரவச மாகிப்
பரமா னந்தப் பரவையுட் படிந்து
பேரா வியற்கை பெற்றினி திருப்ப
ஆரா வின்பம் அளித்தருள் எமக்கே. எ

நேரிசை வெண்பா

எம்மா ருயிராம் எழின்மாசி லாமணியை
அம்மா பெறுதற் கரிதென்றே—சும்மா
இருந்தாரே பெற்றார்மற் றெவ்வுலகில் யாரே
வருந்தாது பெற்றார் மணி. அ

சேதனத்துவம் முதலியன. 29, 36. சிற்றின்பானுபவ நிகழ்ச்சி முறைமை பற்றிப் பேரின்ப அநுபவ நிலை கூறியது.

அ. ஆர் உயிர் - உயிர் ஒருகாலத்துடலைவிட்டு நீங்குதல்போல் இறைவன் உயிரைவிட்டு நீங்குதலில்லை என்பார் ஆருயிர் என்றார். உலகத்து மணிகளை முயற்சி செய்வார் பெறுவர்; இம்மாசிலா மணியைத் தமக்கெனவோர் செயலற்றவர் பெறுவர் என்க. "தனக்கெனவோர் செயலற்றுத் தானதுவாய் நிற்கில்" உண்மை நெறிவிளக்கம் (செ. 6.).

கட்டளைக் கலித்துறை

மணிகொண் டவர்தம் பொருளாவ
தன்றியம் மாமணியாம்
அணிகொண் டவரைக்கொண் டாள்வதுண்
டேயருட் கூடல்வைகுங்
கணிகொண்ட கொன்றைத் தொடைமாசி
லாமணி கண்டவுடன்
பணிகொண்டு தொண்டுங்கொண் டாளுங்கொள்
வோமென்று பார்க்குமுன்னே. ௬

நிலைமண்டில ஆசிரியப்பா

முற்படு மாயை முதற்கரை நாட்டிற்
பற்பல புவனப் பகுதி பற்றி

---

௬. மணி - உலகத்துமணி. கொண்டவர் - தன்னைச் சம்பாதித்தவர். பொருளாவதன்றி - தன்னைச் சம்பாதித்தவர்க்குத் தான் பொருளாயிருப்பதன்றி. ஆள்வதுண்டே - அடிமைகொள்வதுண்டா? இல்லை என்க. சொக்கநாத மூர்த்தியையும், மாசிலாமணியையும் அபேதமாகக் காண்பவராதலின் அருட்கூடல்வைகுங் கணிகொண்ட கொன்றைத்தொடை மாசிலாமணி என்றார். கொள்வோமென்று பார்க்குமுன்னே - ஒருவர் இம்மாசிலாமணியைத் தாமடைவோமென்று எதிர்ப்படுமுன்னமே. பணிகொண்டு - அடிமைகொண்டு. தொண்டுங்கொண்டு - அவர் செயலைத் தன்செயலாகவுங்கொண்டு. ஆளும் - பெத்த நிலையினும் முத்தி நிலையினும் தோன்றாமலும் தோன்றியும் கலந்து நிற்கும்; இம்மணியின்செயல் வியப்பைத் தருவதென்றபடி.

௭. வரி 1. முற்படுமாயை - பிரபஞ்சத்திற்குக்காரணமாகிய மாயை. முற்படுதல் - காரணமாயிருத்தல். முதற்

ஈரிரு கண்ணாற் றெழுதரம் வகுத்த
ஆறே ழிரட்டி நூறா யிரத்த
செயற்படு செய்களி னுயிர்ப்பயி ரேற்றி
ஊழெனப் பட்ட தாழ்புனற் படுகரிற்
றெய்விக முதலாச் செப்புமும் மதகும்
ஒவ்வொரு மதகா யுடனுடன் திறந்து
தாக மென்னுந் தனிப்பெருங் காலிற்
போக மென்னும் புதுப்புனல் கொணர்ந்து

கரை நாட்டில் - பதியைக் கரையாக உடைய நாட்டில். ஆன்மாவிற்கு மாயையின் தொடர்பற்ற நிலையில் ஆதாரமாவது முதற்பொருளாகிய பதியாதலின், முதலை மாயைக்குக் கரை என்றனர். முற்படுமாயை - முதற்சொல்லப்படும் மூன்று மாயைகளாகிய நாட்டில் என்று கொள்ளுதலும் ஒன்று. மூன்று சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதி மாயை என்பன. 2. புவனம் - ஆகமங்களில் சொல்லப்படும் இருநூற்றிருபத்துநான்கு புவனங்களாகிய உலகப் பகுப்பு. 3. ஈரிரு கண்ணாற்று - அண்டசம் முதலாகிய நான்கு இடமாகிய வழியையுடைய. எழுதரம் வகுத்த - தேவர் முதலாகிய ஏழு பெரும்பிரிவுகளாகப் பிரித்த 4. ஆறேழிரட்டி நூறாயிரம் - எண்பத்து நான்கு லக்ஷம். 5. செயற்படுசெய் - கன்மானுசாரமாகச் சிறுபிரிவுகளாகும் யோனி பேதமாகிய வயல். 6. ஊழ் - பிராரத்தகன்மம். ஒன்றன்பின்னொன்றாக வரிசையின் அனுபவிக்கப்படலின் ஊழ் (முறை) என்றாயிற்று. படுகர் - நீர்நிலை. 7. தெய்விக முதலாச் செப்புமும்மதகும் - ஆதிதைவிகம் ஆதியான்மிகம் ஆதிபௌதிகமாகிய மூன்றுமதகும். 8. இடையில் வறிதுபட்ட காலமின்று என்றற்கு உடன் உடன் திறந்து என்றார். 9. தாகம் - ஆசை. 10. போகம் - அநுப

பாயுமைம் பொறியாம் வாய்மடை திறந்து
பருவம் பார்த்து வரன்முறை தேக்கலும்
இதத்துட னகிதம் எனுமிரண் டூற்றிற்
புதுப்புனல் பெருகிப் புறம்பலைத் தோட
வார்புன லதனை மந்திர முதலா
ஓரறு வகைப்படும் ஏரிகள் நிரப்பி
விளைவன விளைய விளைந்தன அறுத்தாங்
கொருகளஞ் செய்யும் உழவ னாகி
மாநிலம் புரக்கு மாசி லாமணி
ஞானசம் பந்த ஞான தேசிக
நல்லருட் டிறத்தா னம்பி நீயே

வித்தல். 11. ஐம்பொறி - பஞ்சேந்திரியம். 12. ஒரு காலத்து ஓரிடத்துப் பயன்பட்டது மற்றொருகாலத்து மற்றோரிடத்துப் பயன்படாதென்பார் பருவம் பார்த்து என்றும், ஒன்றே தன் அளவில் மிகுதலும் குறைதலும் படாதெனவும் ஏககாலத்துப் பல அனுபவிக்கப்படா எனவும் அறிவித்தற்கு வரன்முறை என்றும் கூறினர். 13. இதத்துட னகிதம் - விருப்பு வெறுப்பிற் கேதுவாகிய இன்பத்துன்பம். 14. புதுப்புனல் - போகமாகிய புதுப் புனல். பெருகி - அநுபவகாலத்து உண்டாகும் விருப்பு வெறுப்பினால் அதிகப்பட்டு. 15. வார்புனலதனை - போகத்தை. 'போகமென்னும் புதுப்புனல்' என முற்கூறியது காண்க. மந்திர முதலா அறுவகைப்படும் ஏரிகள் - மந்திரம், பதம், வர்ணம், புவனம், தத்துவம், கலை என்னும் அறுவகை அத்துவாக்களாகிய ஏரிகள். 17. விளைவன விளைய - ஆகாமியவினையேற. விளைந்தன - பிராரத்த வினை. 21. நீயே - உயிர்கட்குப் போகாநுபவத்தின் பொருட்டு இப்படிச் செய்த நீயே. மோக்ஷாநுபவத்தின்

பல்லுயிர்த் தொகுதியும் பயன்கொண் டுய்கெனக்
குடிலை யென்னுந் தடவயல் நாப்பண்
அருள்வித் திட்டுக் கருணைநீர் பாய்ச்சி
வேத மென்னும் பாதபம் வளர்த்தனை
பாதப மதனிற் படுபயன் பலவே—அவற்றுள்
இலைகொண் டுவந்தனர் பலரே இலையொரீஇத்
தளிர்கொண் டுவந்தனர் பலரே தளிரொரீஇ
அரும்பொடு மலர்பிஞ் சருங்கா யென்றிவை
விரும்பினர் கொண்டுகொண் டுவந்தனர் பலரே
அவ்வா றுறுப்பும் இவ்வாறு பயப்ப
ஒரும்வே தாந்தமென் றுச்சியிற் பழுத்த
ஆரா வின்ப அருங்கனி பிழிந்து
சாரங் கொண்ட சைவசித் தாந்தத்
தேனமு தருந்தினர் சிலரே யான்அவர்
நன்னிலை பெறுதற் கன்னிய னுயினும்
அன்னவர் கமலப் பொன்னடி விளக்கிய
தீம்புன லமுத மார்ந்தனன் அதனல்
வேம்பெனக் கொண்டனன் விண்ணவ ரமுதே. ம

பொருட்டு. 23. குடிலை - சுத்தமாயை. 25. பாதபம் - மரம். 26. பயன் - பிரயோசனம், 27, 29. இலை, தளிர், அரும்பு. மலர், பிஞ்சு, காய் என்பன வேதாநு சாரிகளாகிய அகச் சமயங்கள். 32. வேதாந்தம் - உபநிடதம். 36. அன்னியன் - பரிபாகம் இன்மையின் வேருனவன். 38. தீம்புனல் அமுதம் - சிவஞானிகளின் பாதப் புனல் சனன மரணப்பிணியை அறவே நீக்கலின் அமுதமாயிற்று. 39. வேம்பெனக் கொண்டனன் - வெறுத்தனன்.

நேரிசை வெண்பா

விண்புரக்குஞ் சிந்தா மணியென்கோ மெய்ச்சுடரால்
மண்புரக்குஞ் சூளா மணியென்கோ—பண்பாற்
றிருமா முனிவர் சிகாமணியென் கோசீர்
தருமாசி லாமணியைத் தான். கக

கட்டளைக் கலித்துறை

தானவ னுகிய தன்மைபெற் ருனடி தாழப்பெற்ருல்
தானவ னுகிய தன்மைபெற் றுய்வனத் தன்மையின்றித்
தானவ னுகிய தன்மைபெற் றேற்கருள் தாழ்சடிலத்
தானவ னுகம் பெருமாசி லாமணிச் சம்பந்தனே. கஉ

கக. சிந்தாமணி - நினைத்ததைக் கொடுக்கும் மணி. என்கோ - என்பேனு. முனிவர் சிகாமணி - முனிவர்கட்குச் சிரோரத்தினம் போன்றவர்.

கஉ. தானவன் ஆகிய தன்மை பெற்ருன் - சிவோகம் பாவனை செய்து கைவரப்பெற்ற சிவஞானி. தான் - ஒருவன். அவன் ஆகிய - அச்சிவஞானியெய்திய. தன்மை - சிவமாந்தன்மை. தானவன் - தான் என்னும் அகங்காரம் உடையவன். அருள் - அருள்புரிவாயாக. தாழ் சடிலத் தானவன் நாகம் பெரு - தாழ்ந்தசடையில் சந்திரனையும் பாம்பையும் அணியாத. தானவன் - சந்திரன். சடிலத் தான வல் நாகம் பெரு - சடைத்தானத்தில் வலிய நாகத்தைப் பெருத என்றும், சடிலத்தான் அவன் ஆகம்பெரு - சடிலத்தானுக இருந்தும் அந்தச் சிவபெருமானுடைய காளகண்ட திரிநேத்திர சதுர்ப்புயங்களோடு கூடிய வடிவம்பெருத என்றும் கூறுவர்.

நேரிசையாசிரியப்பா

பந்தனை தவிராச் சிந்தனை நிகர்ப்பப்
பாயிருள் பரந்த மாயிரும் பொழிலிற்
கொளற்குரி மாந்தர்க் களித்தல் செய்யா
தரும்பூண் சுமந்த அறிவி லாளரிற்
சுரும்பூண் வெறுத்த துதைமலர் வேங்கை
தன்மருங் குறீஇப் பொன்மலர் பிலிற்ற
இலையறப் பூத்த சுதைமலர்ப் புன்னையின்
மெய்ப்புல னோக்கார் கட்புலன் கடுப்ப
இமையா வறுங்கண் ணிமைத்தபைங் கூந்தற்
பசுந்தார் மஞ்ஞை அசைந்தமர் தோற்றம்
பொற்றுணர் பொதுளிய கற்பகப் பொதும்பர்
பொறிவண் டுண்ணா நறுமலர் தூற்றப்
பாடல் சான்ற கோடுபல தாங்கிக்

கஅ. வரி 1. பந்தனை - மலபந்தம். சிந்தனை - மனம். 2. பாயிருள் மாயிரும் என ஆகார உயிர்வழி யகர உடம்படுமெய் வந்தது. 3. அளித்தல் செய்யா - கொடாத. 4. அறிவிலாளரின் - அறிவில்லாதவர்போல. 5. சுரும்பு - வண்டு. ஊண் - உண்ணுதலை. துதை - நெருங்கிய. 6. தன்மருங்கு - புன்னையாகிய தன்பக்கத்தில். உறீஇ - உற்று. பிலிற்ற - உதிர்க்க. 7. இலையற - இலைதெரியாதபடி. சுதை - வெண்மை. 8. மெய்ப்புலன் - உண்மைப்பொருள். கட்புலன் - கண்ணிந்திரியம். 9. இமையா வறுங்கண் ஈண்டு மயில் தோகையிலுள்ள கண்போன்ற புள்ளிகள். பைங்கூந்தல் - பசுந்தோகை. 10. தார் - கழுத்திலுள்ள வரை. தோற்றம் - காட்சி. 11. பொதும்பர் - சோலை. 13. கோடு - மருப்பு. 14. கவளம் - யானை

கவளங் கொள்ளாத் தவளமால் களிற்றிற்
கண்பல படைத்த கார்முகில் வண்ணத்
திந்திரன் பொலியு மெழினலங் காட்டுந்
தண்பணை யுடுத்த தமிழ்ப்பெருங் கூடல்
வண்பதி புரக்கு மாசி லாமணி
தலைப்படு கலைமதி தாங்கா தாங்கத்
தலைப்படு கலைமதி தாங்கி நிலைப்படு
மானிட னாய வடிவுகொண் டருளாது
மானிட னாய வடிவுகொண் டருளி
எற்பணி பூணா தெற்பணி பூண்டு
பாரிடஞ் சூழாது பாரிடஞ் சூழ்தர
ஆரூ ரமர்ந்த ஞானசம் பந்த
நிற்புகழ்ந் திறைஞ்சுங் கற்பின் மாக்கள்
விருப்பு வெறுப்பற் றிருப்ப ரென்ப
பொருட்டுணி புணர்ந்த புலமை யோரே
இகபர மிரண்டினும் எதிர்நிறை கோளினும்

உணவு. தவளம் - வெண்மை. 15. முகில் - மேகம். 19. தலைப்படு கலைமதி - முடியிற்பொருந்திய கலையோடு கூடிய சந்திரன். 20. தலைப்படுகலைமதி - முதன்மையான நூலுணர்வு. 21. மானிடனாயவடிவு - உமாதேவி இடப் பாகத்திற்பொருந்திய வடிவு. 22. மானிடனாயவடிவு - மானுட வடிவு. 23. எற்பு அணி பூணாது - எலும்பணி பூணாது. என் பணி பூண்டு - என்னை அடிமைகொண்டு. 'பணிகொண்டு தொண்டுங்கொண் டாளுங் கொள்வோம் என்றுபார்க்குமுன்னே' என்றதுங்காண்க. 24. பாரிடம் - பூதகணம். பார் இடம் - பூமியாகிய இடத்திலுள்ளோர். 26. கற்பின் மாக்கள் - கற்றலையுடைய அடியார்கள். 27. விருப்பு வெறுப்பு - விருப்பும் வெறுப்பும். அற்று

தொகுதியுள் வேற்றுமைத் தொகைப்பொருள் கோளினும்
முன்னவர் மொழிந்ததற் கன்னிய மாகலின்
விருப்பு வெறுப்புள் வாய
கருத்தின ராகவுங் கண்டனம் யாமே. கங

நேரிசை வெண்பா

கண்ணிற் கணியாங் கதிர்மாசி லாமணியைப்
பண்ணிற் கணியாப் பகர்வரால்—எண்ணுங்காற்
பன்னூலிற் கோக்கப் படுமணியன் றிம்மணிமற்
றிந்நூலிற் கோக்குமணி யென்று. கச

கட்டளைக் கலித்துறை

என்வச மாகவில் லாதநெஞ் சாமிரும்
பைக்குழைத்துத்
தன்வச மாக்கொண் டிழுக்கின்ற தாற்றொண்டர்
தம்மையருள்

இருப்பர் - நீங்கிப் பொதுமையினிருப்பர். 29, 33. எதிர் நிறைகோள் - மாறுக நிறுத்தப்படுங் கொள்கை. அவை மோட்சத்திற்குப் பந்தமும், ஞானத்திற்கு அஞ்ஞானமும், நித்தியத்திற்கு அநித்தியமும் போல்வன.

கச. கதிர் - கிரணம்; அதாவது சிவசத்தி. சூரியன் புறவிருளை நீக்கித் தன்னையும் மற்றப் பொருளையும் விளக்குவதுபோலக் கதிராகிய சிவசத்தி மலவிருளைப் போக்கிச் சிவத்தையும் ஏனை வைந்தவமாயேயப் பொருள் களையும் அறிவிக்கும் என்க. இந்நூலில் - இந்தப் பிரபந்த மாகிய அன்புநாரில்.

கரு. பதியின்கருணையியல்பை எண்ணி உருகாதது என்பார் நெஞ்சை இரும்பு என்றார். தன்முனைப்பற்ற

மன்வச மாகச் செயுமாசி லாமணி
மாமணிக்குப்
பொன்வச மாகச்செய் காந்தமென் றேசொலப்
போந்ததுவே. கரு

நேரிசையாசிரியப்பா

போந்தையங் கண்ணி வேந்துவிற் பொறித்த
மன்பெருங் கிரியின் மென்கரும் பெழுதித்
தேசுலாம் பசும்பொற் சிகரமந் தரத்தின்
வாசுகி பிணித்தென மணிக்கச் சிறுக்கிக்
கடாம்பொழி கரடக் களிநல் லியானைப்
படாம்புனைந் தென்னப் பைந்துகில் போர்த்துப்
பிதிர்சுணங் கலர்ந்த கதிர்முலை மடந்தையர்
விட்புலத் தவர்க்குங் கட்புலன் கதுவாச்
சூளிகை வகுத்த மாளிகை வைப்பிற்
சுவல்கைத் தாங்குபு மதியணந்து பார்க்கச்
சேணிகந் தோங்கும் யாணர்செய் குன்றத்
தாடகத் தியன்ற சூடகக் கரத்தால்

தொண்டரின் பிராரத்த செயலை அருட்செயலாக்கிவிடும் என்பது கருதி அருள்மன்வசமாச்செயும் என்றார். மன் - மிகுதி. பொன் - இரும்பு.

கசு. வரி 1. போந்தை - பனை. வேந்து - சேரன். வில் - விற்கொடி. 2 .கிரி - இமயம். ‘ஒன்னார் வடபுல விமயத்து வாங்குவிற்பொறித்த எழுவுறழ்திணிதோள் இயல்தேர்க் குட்டுவன்’ என்பது சிறுபாணாற்றுப்படை. 3. மந்தரம் - மந்தரமலை. 8. கதுவா - பற்றாத. 9. சூளிகை - நிலாமணி முற்றம். 10. சுவல் - பிடர். அணந்து - அண்ணாந்து.

மாடகத் திவவியாழ் மருமமீ தணைத்து
மூவகை நிலையத் தேழுசுர நிறீஇக்
கொவ்வைவாய் திறந்து குயிலென மிழற்றுபு
மென்னரம் புகிரான் விரன்முறை தடவிக்
கின்னரம் வியக்குங் கீதம் பாட
நகைநில வெறிக்கு முகமதி காணூஉச்
சந்திர காந்தத்திற் சமைத்தசெய் குன்றம்
மைந்தர்போன் றுருகி மழைக்கணீர் சொரியப்
பல்வளஞ் சுரக்கும் பைந்தமிழ்க் கமலை
நல்வளம் பதிவாழ் ஞானசம் பந்த
பாசமா மிருட்கோர் படர்மணி விளக்கெனு
மாசி லாமணித் தேசிக ராய
சாற்றுவன் கேண்மதி மாற்றமொன் றுளதே
மெய்ம்மயிர் சிலிர்ப்பக் கண்ணீர் வார
மொழிதடு மாற வுழுவலன் பலைப்பச்
சத்திநி பாதத் தன்மைவந் தடைந்தோர்க்
கப்பொருள் புரிதற் கதுபொழு தாகலின்
மெய்ப்பொரு ளுணர்த்துதல் வியப்பெனப் படாதே
சொற்றமிழ் விரகன் றுணைக்கண் சார்த்த

---

11. யாணர் - அழகு. 13. மாடகம் - முறுக்காணி. 14. மூவகை நிலையம் - மூன்று தானம்; அவை மந்தம் மத்திமம் உச்சம் எனப்படும். 15. கொவ்வை - கோவைக்கனி. 16. உகிர் - நகம். விரல்முறை - அந்தந்த அக்ஷரங்கட்குரிய விரல்கள். 17. கின்னரம் - ஒருவகைப் பறவை. 23. மணிவிளக்கு - இரத்தின தீபம். சுயஞ்சோதியாதலின் மணிவிளக்கென்ருர். 26. மெய்ம்மயிர் சிலிர்த்தல் முதலாயின சத்திநிபாத இலக்கணம். 29. அப்பொருள் புரிதல் - அருள்புரிதல். 31. சொற்றமிழ் விரகன் ஈண்டுத் திருவாதவூரடிகள்.

முற்றுணர் கேள்வியர் பற்பல ராயினுங்
கைசொலக் கேட்குங் கட்செவி மூங்கைக்
குய்வகை புணர்த்த தொருவியப் பாகலின்
அன்னது கடுப்பநின் சந்நிதி விசேடத்
தின்னருள் பெறுதவர் யாவரு மிலரென
வியப்புள தாக நயப்பதொன் றுளதே
அனையதிங் கென்னென வினவுதி யாலெனிற்
கதலித் தண்டிற் பொதிதழற் கொளீஇப்
பற்று திருப்பினும் பைப்பைய மூட்டுபு
மற்றொரு சூழ்ச்சியிற் பற்றுவித் தாலென
ஒருசிறி தெனினும் பருவமின் றுயினும்
பவவிருள் துரந்தருள் பதியத்
தவமில் பேதையேன் றனக்கருள் வதுவே. கசு

நேரிசை வெண்பா

தன்னே ரிலாஞான சம்பந்தன் றுளடைந்தார்க்
கென்னே இருள்வெளியா மென்பரால்—அன்னேன்
அருளாத போதுவெளி யாயிருந்த வெல்லாம்
இருளா யிருந்த எனக்கு. கஎ

---

33. கைசொலக் கேட்கும் - கைக்குறிப்பால் தெரிந்து கொள்ளும். ஊமையாயினர்க்குக் காதுங் கேட்காதென்னு மரபுபற்றிக் கட்செவிமூங்கை என்றார். 37. நயப்பது - விரும்பத்தக்கது. 40. பைப்பைய - மெள்ளமெள்ள.

கஎ. இருள் வெளியாம் என்பர் - அஞ்ஞானம் நீங்கி ஞானம் பிரகாசமாம் என்பர். என்னே - என்ன வியப்பு. வெளியாயிருந்த எல்லாம் - சுட்டறிவால் அறியப்பட்ட

கட்டளைக் கலித்துறை

என்செய லாவொன் றும் யான்செய்வ தில்லை
யெனக்கவமே
புன்செய லாம்வினைப் போகமுண் டாவதென்
போதமில்லேன்
றன்செய லாயவெல் லாமாசி லாமணிச்
சம்பந்தநின்
நன்செய லாயினு மென்செய லாச்செய்யு
நானென்பதே. கஅ

நேரிசையாசிரியப்பா

நான்மறைக் கிழவ நற்றவ முதல்வ
நூன்முறை பயின்ற நுண்மைசா லறிஞ
சொற்சுவை பழுத்த தொகைத்தமிழ்க் கவிஞ
கற்றவர் வியக்குங் காவியப் புலவ
செவிதொறுஞ் செவிதொறுந் தெள்ளமு தூட்டுபு
கவிஞர்வயி னிரப்புங் கவிப்பிர சங்க
வெள்ளிடைத் தோன்று துள்ளத் துணர்த்தவுஞ்

யாவும். இருளாயிருந்த - ஆன்மபோதம் சுட்டுணர்விறந்த சிவபோதமானபோது விளங்கா தொழிந்தன.

கஅ. இறைவன் செயலன்றி உயிர்க்கு ஓர்செயலும் இன்றெனவும், அப்படியாகவும் உயிர் இறைவன் செயலைத் தன்செயலாக எண்ணும் நான் என்னும் அகங்காரத்தால் வினையநுபவம் உயிர்க்குவருகிறது எனவும் அறிக.

கக. வரி 6. வயின் - இடம். 7. வெள்ளிடை - வெளியிடத்தில். உள்ளத்துணர்த்துதல் - அறிவில் நின்றுணர்த்

சேய்நிலை நின்று திருக்கண் சார்த்தவுஞ்
சாயா மும்மலச் சகலரே முய்ய
எம்முருக் கொண்டு மெம்மொடு பயின்று
மும்மலக் கிழங்கை முதலொடு மகழ்ந்து
சிற்பர முணர்த்துஞ் சற்குரு ராய
பளிங்கினிற் குயின்ற பனிநிலா முற்றத்து
விளங்கிழை மடந்தையர் விளையாட் டயர்தரக்
கொங்குவார் குழலுங் குவளைவாள் விழியும்
பங்கய முகமும் பத்திபாய்ந் தொளிர்தலிற்
சைவலம் படர்ந்து தடங்கய லுகளுஞ்
செய்யபூங் கமலச் செழுமல ரோடையென்
ருடவர் சிற்சிலர் நாடினர் காணூஉ
வம்மின் வம்மின் மடந்தையர் நீவிர்மற்
றம்மெல் லோதி யரம்பைய ராதலின்
நீர்நிலை நிற்றிரா னீரவர் தங்களுள்
யார்கொல் யார்கொல் இசைமி னிசைமினென்
றிரும்பூ தெய்தி யிரந்தன ரிசைப்ப
மறுமொழி கொடாது குறுநகை முகிழ்த்தாங்
கையுற வகற்று மணிமதிற் கமலை
நன்னகர் புரக்கு ஞான தேசிக
ஆசிலா வண்புக ழுணிநிலா வெறிக்கு
மாசி லாமணி ஞானசம் பந்த
என்பொருட் டாயினு மென்பொருட் டன்றிது
நின்பொருட் டொருபொருள் நிகழ்த்துவன் கேண்மோ

துதல். அதாவது தன்மையின் உணர்த்துதல். 8. சேய்நிலை நின்று திருக்கண் சார்த்துதல் - முன்னிலையினுணர்த்துதல். 9. சாயா - தன்மையிலும் முன்னிலையிலும் நின்றுணர்த்தின் கெடாத; எனவே படர்க்கையின் உணர்த்தவேண்டும்

வறிஞ னோம்பிய செறுவொன் றேய்ப்பப்
பருவ நோக்காப் பவந்தொறும் பவந்தொறும்
இருவினைப் போகமு மெற்கொண் டார்த்துபு
மற்றென் னுருக்கொடு முற்றனை யாலினித்
தாகமின் றாகலிற் பாகமின் றெனக்கென
அருளா தொழியினும் பரிபவ நினக்கே
சேய்முகம் பாராள் சினந்தன ளேகினும்
போயெடுத் தாற்றுமத் தாய்மீட் டன்றே
ஆதலி னெனைப்போ லடிக்கடித் தோன்றலை
ஈதியா னின்னரு ளின்னண மெனக்கே
சமையந் தீர்ந்த தனிப்பொரு டெரித்தற்
கமையந் தேர்கலை யருளுதி யாயினும்
எண்ணீ ராண்டைக் கிலக்கமிட் டிருந்த
அண்ணலங் குமரற் காருயிர் தோற்றக்
கடாவிடை யூர்திபாற் கண்டும்
அடாதென மொழிகுந ரார்கொன்மற் றுனையே. கக

என்றாயிற்று. 12. சிற்பரம் - ஞானப்பொருள். 24. இறும்பூது - ஆச்சரியம். 32. செறு - வயல். 33. பவம் - பிறவி. 34. ஆர்த்துபு - உண்பித்து. 35. என் உரு - என் உருவம் போன்ற உருவம்; அது சகலம். 37. பரிபவம் - அவமானம். 45. அண்ணலங்குமரன் - பெருமையிற் சிறந்த குமரன்; மார்க்கண்டன். 46. கடாவிடையூர்தி - எருமைக்கடாவாகிய விடைத்துச் செல்லும் ஊர்தியை உடைய இயமன். பால் - முன்னிலையில். ஊழ்வரம்புக் குட்பட்டு நடந்த இயமன் முன்னிலையில் உயிர் தோன்றச் செய்த நின் வரம்பு கடந்த செயலை. 47. அடாது - தகாது.

நேரிசை வெண்பா

ஆரூரே யூர்பே ரருண்மாசி லாமணியென்
ஞ்ரூர்பே ரில்லாற் குரைத்தேற்குப்—பாரேறப்
பொய்யென்ருன் மெய்யென்ருன் பொய்யான பொய்யுடலை
மெய்யென்ருன் பொய்யென்ருன் மீண்டு. உ௰

கட்டளைக் கலித்துறை

மீளா மணிமந் திரமருந் தாற்சென்ம
வெவ்விடநோய்
வாளா மணியொன் றினுன்மீண்ட வாவம்
மணிபிறர்கொண்
டாளா மணியெமை யாட்கொள்சிந் தாமணி
யைந்தவித்தோர்
சூளா மணிமெய்ச் சுடர்மாசி லாமணி
சூழ்ந்திடினே. உக

உ௦. பார் - சுத்தாசுத்தப் பிரபஞ்சங்கள். பொய் - முத்திநிலையில் விளங்குவன அல்ல. மெய் - அவை நித்தியப் பொருள்கள். உடலை மெய் என்ருன் - மெய்யென்னும் பெயருடையதென்ருன். பொய் என்ருன் - பசுகரணம் சிவகரணமாயவழி மாயேயகரணம் பயன்படா தொழிந்து பொய்யாம் என்ருன். ஊர் பேர் இல்லாதாற்கு ஊரும் பேருங் கற்பித்த என்னைப் பொய்யென்றும் மெய்யென்றும் திரும்பத் திரும்பக் கூறி மயக்கினுன் என்னும் நயங்காண்க.

உக. மணிமந்திர மருந்தால் மீளாச்சென்ம வெவ்விட நோய் எனக் கூட்டுக. சென்ம வெவ்விடநோய் - பிறவி நோய். அது கூடியும் குறைந்தும் துன்புறுத்துமென்றற்கு

நேரிசையாசிரியப்பா

சூழ்போய் நிவந்த வாழ்கட லுலகத்
தின்னருட் டிறத்தா லிடைமரு தமர்ந்த
பொன்னவிர் கடுக்கைப் புரிசடைப் புங்கவன்
அமையாக் காத லிமையவல் லிக்கும்
வழிபடன் முறைமை விழுமிதி னுணர்த்தத்
தானே தன்னைப் பூசனை புரிந்தென
அருத்தியோ டெம்மைநம் முருத்திர கணங்கள்
தெரித்துமற் றிவ்வா றருச்சனை புரிதிரென்
றங்கயற் கண்ணி பங்கில்வீற் றிருந்த
செக்கர் வார்சடைச் சொக்கநா யகனை
ஈரெண் டிறத்துப சாரமும் வாய்ப்பப்
பூசனை புரியுந் தேசிக ராய

விடநோய் என்றார். மீண்டவா - மீண்டவிதம் வியப்பென்க. சூழ்ந்திடின் அம்மணி மாசிலாமணி எனக் கூட்டுக. பிறர் கொண்டு ஆளா மணி என்பதை 'மணி கொண்டவர் தம் பொருளாவதன்றி அம்மாமணியாம் அணி கொண்டவரைக் கொண்டாள்வதுண்டே' என ஒன்பதாம் பாட்டிலும் விளக்கியிருத்தல் காண்க.

உஉ. வரி 1. நிவந்த - உயர்ந்த. ஆழ்கடலுக்கு நிவத்தலாவது அலைபுரண்டு ஓங்கி வருதல்; ஆழ்கடல் சூழ்போய் நிவந்த உலகத்து என்று கூட்டிப் பொருள் கொள்ளலுமொன்று. 3. கடுக்கை - கொன்றை. புரிசடைப் புங்கவன் - சிவபெருமான். 4. இமையவல்லிக்கும் என்ற உம்மையால் காசியபராதி முனிவருக்கும் என்றுகொள்க. 6. புரிந்தென - செய்ததுபோல. 7. உருத்திர கணங்கள் என்றது அண்மைவிளி. உருத்திர கணங்கள் ஈண்டு அடியார்கள். 8. தெரித்து - தெரிந்து. 9. அங்கயற்

மழைக்குலந் தழைப்பத் தழைத்ததீம் பலவின்
வேரிடைப் பழுத்துப் பாரினுட் கிடந்த
முட்புறக் கனிகள் விட்புறக் கமழ்தலுஞ்
சிறுகண் மந்தி குறிவழிச் சென்று
கீண்டுபொற் சுளைபல தோண்டுவ தம்ம
முற்பக லொருவர் பொற்குட நிரம்பப்
புதைத்தனர் வைத்த நிதிக்குழா மனைத்தும்
வஞ்சகம் பழகு மஞ்சனக் கள்வர்
கண்டுகண் டெடுக்குங் காட்சித் தன்ன
தண்டலை வளைஇத் தடமதி லுடுத்த
தேசுலாங் கமலைத் திருநகர் புரக்கு
மாசி லாமணி ஞானசம் பந்த
வாக்கு மனனும் யாக்கையு மொன்றாச்
சொற்றரு கரண மற்றிவை மூன்று
நின்புகழ் நவிற்றியு நினைத்துநின் றுணைத்தாள்
அன்புட னிறைஞ்சியு மின்பமுற் றனவால்
அவகர ணங்களே யல்லமற் றம்ம
சிவகர ணங்களாய்த் திரிந்தன அன்றே அதனால்
திரிகர ணங்களென் றுரைசெயு மப்பெயர்
ஒருபொருட் கிளவியெல் லோர்க்கும்
இருபொருட் கிளவியா யிருந்ததென் றெனக்கே. உஉ

கண்ணி - மீநாக்ஷி. 10. செக்கர் - சிவப்பு. 11. ஈரெண் திறத்து உபசரம் - பதினாறுவகை உபசாரம், அவை ஆவாகனம் முதலியன. 15. முட்புறக்கனி - பலாக்கனி. விட்பு - வெடிப்பு. 16. மந்தி - குரங்கு. 20. அஞ்சனக் கள்வர் - மறைவில் உள்ள பொருளை மையிட்டுக் காண்போர், 22, தண்டலை - சோலை. 25. ஒன்றாய் - ஒன்றோடொன்று சேர்ந்து: புண்ணியமில்லார்க்குத் திரிகரணங்களுள் ஒன்று

நேரிசை வெண்பா

எற்கமலஞ் செய்யு மெழின்மாசி லாமணிதாட்
பொற்கமலஞ் சென்னி பொலிவித்தேன்—நற்கமலை
யூரிற் குறுகினேன் ஓர்மாத் திரையளவென்
பேரிற் குறுகினேன் பின். உங

கட்டளைக் கலித்துறை

பின்னம் படைத்த சமய விரோதப் பிணக்கறுத்தோர்
சின்னம் படைத்த முனிமாசி லாமணிச் சித்தரியாம்
இன்னம் படைத்தவ ரேதுபெ ருரமு திங்கெமக்கென்
றன்னம் படைத்தவர் பெற்றுர் புவன மடங்கலுமே. உச

சென்றவழி ஒன்று செல்லாது என்றறிக. 29 அவகரணங்கள் - செய்யவேண்டியதைச் செய்யாதவை. 31. அப்பெயர் - திரிகரணமென்ற பெயர். 33. இருபொருட்கிளவியாயிருந்தது - மூன்று கரணம் எனவும் திரிந்த கரணம் எனவும் பொருள்பட்டு நின்றது.

உங. எற்கு - எனக்கு. அமலம் - மலம் சக்தியற்றதாக. தாள் பொன் கமலம் சென்னி பொலிவித்தலாவது இறைவனது ஞானக்கிரியா சக்தி வியாபகத்தில் ஆன்மபோத முனைப்பு தலைமடங்கி நிற்றல். கமலை ஈண்டுத் தருமை. கமலையே தருமை எனக் கொண்டார் என்க. பேரில் ஓர் மாத்திரையளவு குறுகுதல் சீவன் என்றபெயர் சிவன் என்றுதல். ஈண்டுச் 'சிவோகம் பாவிக்குமத்தாற் சிவனுமாவர்' என்னும் சிவஞானசித்தியார்(சூ. 12, செ, 3) சிந்தனைக்குரியது.

உச. விரோத சமையப் பின்னம்படைத்த பிணக்குகளை அறுத்து அதற்கறிகுறியாக ஜெயசின்னம் முழங்கப்

நேரிசையாசிரியப்பா

அடங்கா வைம்புல னடங்கினர்க் கம்ம
ஒடுங்கா வைம்புல னுளத்தினு முளவே அவைதாம்
செவிப்புல னறியா அகத்தொலி யொன்றே
மெய்ப்புல னறியாத் தட்பமற் றென்றே
கட்புல னறியாக் கதிரொளி யொன்றே
நாச்சுவை யறியா நறுஞ்சுவை யொன்றே
மூக்குயிர்த் தறியா முருகுமற் றென்றே

பெறுமுனி. மாசிலாமணிச் சித்தர் - மாசிலாமணி தேசிகரை வழிபடும் சித்தர். எமக்கென்று அன்னம் படைத்தவர் புவன மடங்கலும் பெற்றார் இங்கு இன்னம் அமுது படைத்தவர் ஏதுபெறார் என்று கூட்டிச் சித்தென்பதற் கேற்பப் பொருள்கொள்க. எமக்கென்று - எம்முடைய சுக துக்கானுபவத்திற்காக, புவன மடங்கலும் பெற்றார் - உலகமுழுதும் உண்டாக்கினார். அன்னம் படைத்தவர் - அன்ன ஊர்தியையுடைய அந்தப் பிரமன், அமுது ஏது - மோட்ச ஏதுவை. இன்னம் பெறார் - இன்னும் அடைந்தாரில்லை என்பது மற்றொரு பொருள்.

௨௫. வரி 1. ஐம்புலன் - ஐந்து இந்திரியம். புலத்திற் புலப்படாது அகத்தில் தோன்றும் அகத்தொலி தட்பம் கதிரொளி நறுஞ்சுவை முருகு என்பவை பிராசாதயோகம் பற்றிச் சுத்தாவத்தையிற் செல்லுங்கால் புலனாகும். அது தத்துவப்பிரகாசம் சிற்றம்பலநாடிக்கட்டளை முதலியவற்றில் முத்திநிலை முப்பதவதரம் என்னும் பகுதியில் காண்க. அன்றியும் உளம் என்பதற்கு ஆன்மா எனக்கொண்டு அகத்தொலி முதலிய ஐந்தும் முத்திநிலையிற் புலனும் என்பதும் ஒன்று. அவை மாயேய வைந்தவ

பேரா வின்பமிப் பெற்றியிற் றிளைக்கும்
ஆரா வின்பமொன் றார்ந்தனம் யாமே. அதுவே
கரையெறிந் தார்க்கும் பொருபுனற் படுகரிற்
பணிலமீன் றளித்த மணிநிலாப் போர்ப்பத்
தருணவெள் ளெகினந் தன்னகத் தடங்க
அருண முண்டகம் அகவிதழ் முகிழ்ப்பது
தெண்டிரை யுடுத்த தீம்புனன் மடந்தை
வெண்டுகிற் படாஅம் விரித்தனள் போர்த்து
வள்ளவாய்க் கமல மலர்க்கையால் வளைத்துப்
பிள்ளைவெள் ளெகினம் பிடிப்பது கடுக்குங்
காசுலாம் பசும்பொற் கடிமதிற் கமலை
மாசி லாமணி ஞானசம் பந்தனென்
றருந்தவர் துதிப்பவோர் பெரும்பெயர் நிறீஇப்
பரமா னந்தப் பரவையுள் தோன்றிய
இன்பவா ரமுதம்அவ் வமுதம்
அன்பருக் கெளிதெளி தரிதுவிண் ணவர்க்கே. உடு

சம்பந்தமின்றிச் சிவசத்தி யாதாரமாக நிகழும் என்க. 9. ஆராவின்பம் - சிவாநந்தம். 10. படுகர் - நீர்நிலை. 11. பணிலம் - சங்கு. மணி - முத்து. 12. தருணம் - இளமை. எகினம் - அன்னம். 13. அருணமுண்டகம் - செந்தாமரை. 14. புனல்மடந்தை - நீர்மகள். 18. காசு - பொன். பொன் - அழகு. 20. ஆரமுதம் என்பதற் கேற்ப அருந்து அவர் எனவும் அரும் தவர் எனவும் கொள்க.

நேரிசை வெண்பா

விண்மணியாய்க் காண்போர் விழிக்குட் பொலிந்ததுணைக்
கண்மணியாய் நின்றெவையுங் காட்டுமால்—
ஒண்மணிச்சூட்
டம்மா சுணந்தள்ளி யம்முடிமேற் கொண்டிருந்த
இம்மா சிலாமணிமற் றின்று. உசு

கட்டளைக் கலித்துறை

இன்றோர் வியப்புள தான்மாசி லாமணி யென்றிருப்ப
தொன்றோர் மணிகண் டவர்பல ராலதற் கோர்மருங்காய்
நின்றோர் பலபல பேதங்க ளாச்சொல்வர் நீக்கமறச்
சென்றோர்மற் றிம்மணி செம்மணி யேயென்று செப்புவரே.

---

26. விண்மணி - சூரியன். பெத்தத்தும் முத்தியினும் தனித்தும் ஒற்றித்தும் நின்று உபகரித்தலை விளக்குவார் விண்மணியாய்க் கண்மணியாய் நின்று எவையுங் காட்டு மென்றார். மாசுணம்-பாம்பு. அம்முடி - அந்தச் சடாமுடி.

27. ஒன்று ஓர் மணி - ஒன்றாகிய ஒருமணி. கண்டவர் பலர் - அந்தந்தச் சமயநெறிபற்றி யுணர்ந்தோர் பலர். ஓர் மருங்காய் நின்றோர் - சித்தாந்த சைவத்தினின்றும் சிறிது சிறிது பேதப்படும் அகச்சமயி முதலாயினோர். பலபல பேதங்கள் - பேதவாதம் அபேதவாதம் சிவசமவாதம் முதலாயின. நீக்கமறச் சென்றோர் - சைவ சித்தாந்தச் செந்நெறிச் சென்றோர். செம்மணி - முத்தியிலும் பெத்தத்திலும் விளங்கியும் விளங்காதும் ஒரு தன்மைத்தாய் உபகரித்து நிற்கும் அநந்நியச் செம்பொருள்.

நேரிசையாசிரியப்பா

ஏழுயர் மும்மதச் சூழிமால் யானை
தடம்புனல் குடைந்து படிந்தெழுந் துழக்கத்
தெண்டிரை சுருட்டுங் குண்டகழ் வாவியிற்
பங்கயத் தவிசிற் பசும்பொற் றாதளைந்
தங்கம் வேறுபட் டரசனம் பொலிதலும்
ஆவலிற் படர்ந்த சேவல்கண் டயிர்த்துநம்
பேடையன் றிதுமல ரோடையு மன்றாற்
படரும்வெண் டாமரை படர்ந்ததை யன்றிது
கடவுள ரமுதங் கடைந்தபாற் கடலே
காந்துவெங் கனற்கட் களிறுமன் றிதுகடற்
சாய்ந்தெழு மந்தரத் தடங்கிரி யதுவே
போகுவா லுறுப்பும் புழைக்கையுந் தைவரும்
பாகரோ வாசுகி பற்றும் வானவரே
பொங்கிவெண் ணிலவு பொழிந்தவெண் டரளமன்
றிங்கிது அங்கதி லெழுந்தவா ரமுதே
கொடிவிடு பாசடைக் குழாமன் றிங்கிதக்
கடலிடைத் தோன்றிய கற்பகா டவியே
சேயிதழ் விரிக்குஞ் செந்தா மரையிதன்
றாயதன் வடிவமா யமர்ந்தமா நிதியே
சங்கமன் றிதுவதன் றனிப்பெயர் நிதியே

---

28. வரி 1. ஏழுயர் - ஏழிடம் உயர்ந்த அல்லது ஏழு முழம் உயர்ந்த. சூழி - முகபடாம். 3. குண்டு - ஆழம். 4. பொற்றாது - மகரந்தம். 6. அயிர்த்து - சந்தேகித்து. 8. படர்ந்ததை என்பதில் ஐகாரம் சாரியை. 12. போகு - நீண்ட. தைவரும் - தடவும். 16. பாசடைக்குழாம் - பசிய இலைக்கூட்டம். 17. கற்பக அடவி கற்பகாடவி எனத்

செங்கிடை யன்றிது சிந்தா மணியே
ஆதலி னமதுபேட் டன்னமு மன்றிதப்
போதிலங் குதித்த பொலங்கொம் பன்றே
என்றுள மருளவோ ரெழில்நலம் பயக்கு
மன்றலம் பணைசூழ் மருத வேலிப்
பொன்மதிற் கமலை நன்னகர் புரக்குந்
தேசிக ராய சிற்பர முதல்வ
மாசி லாமணி ஞானசம் பந்த
எனையாட் கொள்ளவந் தெய்தினை யாகலின்
முனியா தொன்றிது மொழிகுவன் கேண்மதி
கற்றன ராயினுங் கல்லா ராயினும்
அற்றனம் யாமென அடைந்தனர் தமையெனிற்
காலம் பாரார் கருத்தினை யளவார்
சீலம் நோக்கார் தீக்குணங் கொள்ளார்
பரிசிலர் வேண்டிய பரிசுமற் றெல்லாம்
வரிசையோ டளிப்பது வள்ளியோர் கடனே
நன்னெறிப் படரா நலமிலி யாயினுஞ்
செந்நெறிப் படர்ந்தநின் சீர்புனைந் தேத்தலிற்
சத்திநி பாதநின் சந்நிதிப் பட்ட
இத்திறத் தெளிதினி லெய்திய தெனக்கே அதனால்
சரியையிற் றாழ்க்கலை கிரியையிற் பணிக்கலை
யோகத் துய்க்கலை பாகமு நோக்கலை

தீர்க்கசந்தி பெற்றது. 21. செங்கிடை - செந்நெட்டி. 23. பொலங்கொம்பு - இலக்குமி. 25. மருதவேலி - மருதநிலஞ் சூழ்ந்த. 32. அற்றனம் - யாதுமற்றோம். 36. வள்ளியோர் - கொடையுளோர். 39. சத்திநிபாதம் - சத்தி பதிதல். நிபாதம் - வீழ்ச்சி. பதிதல் பதியினது அவ்வியாஜ

நாளையின் றெனவொரு வேளையு நவிற்றலை
ஈண்டெனக் கருளுதி இறைவ
பூண்டுகொண் டிருப்பனின் பொன்னடித் துணையே. உஅ

நேரிசை வெண்பா

பொன்னே யல்லாமற் பொருளோ டுடலுயிர்விற்
றென்னே மணியொன் றெவர்கொள்வார்—கொன்னே
குருமாசி லாமணியைக் கொள்வோர்கொள் ளாமுன்
தருவார்மற் றிம்மூன் றுந் தான். உகூ

கட்டளைக் கலித்துறை

தருமணிக் கோவைத் தகுஞான சம்பந்தன்
றண்கமலைக்
குருமணிக் கோவை நிகர்மாசி லாமணி
கோத்திடலால்

காருணியச் செயல் நினைந்து வாழ்த்தலே பிரதியுபகாரம் என்பார் பூண்டு கொண்டிருப்பன் நின் பொன்னடித் துணையே என்றார்.

29. பொருளோடு உடல் உயிர்விற்று - உடல் பொருள் ஆவி மூன்றுந் தத்தஞ்செய்து. முன் - மாசிலா மணியாகிய பொருளைக் கொள்ளுமுன். தருவார் மற்று இம் மூன்றும் - இந்த மூன்றையும் விலையாகக் கொடுப்பர்.

30. தரு - கற்பக விருட்சம். மணிக் கோ - மணிகளுட் சிறந்த சிந்தாமணி. தகு - ஒத்த. மணிக்கோ என்பதை கோமணி எனமாற்றிக்கண்மணி எனக்கொள்க. கோ-கண். இம்மும்மணிக்கோவை - இந்த மும்மணிக் கோவையாகிய

ஒருமணிக் கோவையிம் மும்மணிக் கோவையொண்
சங்குகஞ்சம்
பெருமணிக் கோவைப் பொருளாக்கொள் ளாரிது
பூண்டவரே. ௩௰

நூல். மாசிலாமணி கோத்திடலால் - மாசிலாமணியாகிய ஒரு மணியையே கோத்திடலால்; ஒருமணிக் கோவையே யாம். சங்கு கஞ்சம் பெருமணி - சங்கினையுந் தாமரையையும் ஒத்த சங்கநிதி பதுமநிதிகளையும், கோவை - காமதேனுவையும், இது பூண்டவர் - இந்த மும்மணிக் கோவையை மனத்திற்கொண்டு பாராயணஞ் செய்யும் அடியார்கள்; பொருளாகக் கொள்ளார் எனவே மோட்சம் சித்தியாகும் என்றபடி.

நூற்சிறப்பு

தடுத்த பிறவித் தளையாம் விலங்கு தனைமுறித்து
விடுத்த கருணைக் கடன்மாசி லாமணி மெய்ப்புகழாற்
றொடுத்த தமிழ்மும் மணிக்கோவை நித்தந் துதிக்கவல்லார்
எடுத்த சனனத்தி லெய்தாத பேரின்ப மெய்துவரே. க

க விலங்கை முறித்து விடுத்த கருணைக்கடலாகிய மாசிலாமணி என்க. எய்தாத - உபாயங்களான் எளிதின் அடைய முடியாத.

உள்ளத் தருணின் றுணர்த்தவென் னுவி லுறைந்தவெள்ளை
வள்ளக் கமலத் தவண்மாசி லாமணி வண்புகழில்
எள்ளத் தனையள வோர்தொடை யாக்கி யிசைத்தனளாற்
கள்ளப் புலன்கொண் டுரைத்தே னலனிக் கவிமுற்றுமே. ௨

விரிக்குஞ் சரியையிப் பாமாலை சேர்த்தது மெய்க்கிரியை
தரிக்கும் படிக்கின்று சார்த்திய தேமற்றென் தண்டமிழ்நீ
தெரிக்கின்ற போதருள் செய்தது வேசிவ யோகமுண்மை
பரிக்கின்ற ஞானமொன் றேமாசி லாமணி பாலித்ததே. ௩

பண்டார மும்மணிக்கோவை முற்றும்.

---

௨ என் நாவில் உறைந்த வெள்ளை வள்ளக் கமலத்தவள் உள்ளத்து அருள் நின்றுணர்த்த உரைத்தனன் எனவே, அவளுக்கும் துதிக்க எட்டாதது என்றாயிற்று. கள்ளப் புலன் - பாசஞானமாகிய கல்வியறிவு.

௩ பூவெடுத்து மாலைகட்டலும் பூசித்தலும் சிவனை முன்னிலையாக்கிக் கோடலும் அருள்பெறுதலும் முறையே சரியை கிரியை யோகம் ஞானம் எனக் கூறியபடி. தெரிக்கின்றபோது - தெரிகின்றபோது அல்லது நான் தெரிவிக்கின்றபோது நீ அருள்செய்தது எனினும் ஆம்.

தமிழ்மணங் கமழுங் கமலையம் பதிவாழ்
ஞானசம் பந்தனை வணங்கின்
ஈனசம் பந்த மில்லைவீ டெளிதே. 1

மாசி லாமணித்
தேசி காவெனப்
பேசு வோர்கண்முப்
பாச மோடுமே. 2

செந்நெலுங் கன்னலுஞ் சேருமெய்த் தருமை
நன்னகர் வருசிவ ஞான தேசிகன்
பொன்னடி யிணைமலர் போற்றுதும்
மன்னுபே ரின்ப வாழ்வுபெறற் பொருட்டே. 3

இப்பாடல்கள் மூன்றும் டாக்டர் ஐயர் அவர்கள் பதிப்பித்த பிரபந்தத் திரட்டில் உள்ளன.